# முரசொலி

2½ அணா

சு 1 | சென்னை | 25—3—55 | வெள்ளி | ஒலி 52




...அழகிரி நினைவு இதழ்

# நான் கண்ட அழகிரி

மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம்மையார்

நான் காங்கிரசில் தொண்டாற்றிக்கொண்டிருக்கும் போது, தோழர் அழகிரிசாமி பட்டுக்கோட்டையில் ஒரு காங்கிரஸ் கூட்டத்திற்கு என்னைப் பேசுவதற்கு அழைத்திருந்தார். அப்போதுதான் அழகிரிசாமியை நான் முதன் முதலில் சந்தித்தேன். பிறகு சில நாட்கள் நானும் அவருமாகவே பல காங்கிரஸ் கூட்டங்களில் பேசினோம்.

காஞ்சிபுரம் மாநாட்டிற்குப் பிறகு பெரியார் தனிக் கட்சி ஆரம்பித்தார். நானும் காங்கிரசை விட்டு விலகினேன். அழகிரி அப்போதெல்லாம் காங்கிரசிலிருந்துகொண்டு என்னைத் திட்டிப் பேசிக்கொண்டிருந்தார். நான் ஒருநாள் நேரிலேயே சந்தித்தேன். அப்போதும் என்னைத் திட்டினார். அப்போது நான் சொன்னேன்—"காங்கிரசில் காந்தியாரால் கொண்டுவரப்பட்ட சமுதாய சீர்திருத்தத் திட்டங்களை இப்போதைய காங்கிரஸ்காரர்கள் கைவிட்டுவிட்டார்கள்; எனவேதான் நான் காங்கிரசை விட்டு விலகினேன்; என்னுடைய நோக்கமெல்லாம் சமுதாய சீர்திருத்தமே தவிர அரசியலல்ல' என்றேன். அப்போதும் என்னுடைய கொள்கையை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை; மறுத்தே பேசினார்.

அதற்குப் பல நாள் கழித்துப் பட்டுக்கோட்டையில் சுயமரியாதை வாலிபர் மாநாடு தோழர் குருசாமி தலைமையில் நடைபெற்றது. அப்போது திடீரென்று மேடைக்கு வந்தார் அழகிரி! நான் அவரைக் கண்டவுடன் சிரித்துவிட்டேன்! "எங்கு வந்தீர்கள்!" என்றேன்.

"தோழர் எஸ். வி. லிங்கம் என்னை அழைத்துவந்து சேர்த்தார்" என்றார் புன்சிரிப்புடன்.

அப்போது "என்னையும் அவர்தான் சேர்த்தார்"—என்றேன்.



அந்த மாநாட்டில்தான் தோழியர் மரகதவல்லியை அழைத்துவந்துகாரைக்குடி முருகப்பா அவர்கட்கு முதன் முதல் விதவா கலப்புத் திருமணம் செய்து வைத்தேன். அதில் அழகிரி பேசும்போது 'திருடன் பொன் திருடுவான்; இந்த அம்மாள் பெண்ணைத் திருடிவிட்டாள். அதுவும் எங்கள் ஊர் பெண்ணைத் திருடி மணம் முடித்து வைத்தார். உள்ளபடியே அதில் எனக்குத்தான் பெருமை'-என்று பேசினார்.

அன்று முதல் உதவியோ பதவியோ விரும்பாமல் சுயமரியாதை இயக்கத்தில் வெறிபிடித்தவன்போல் உழைத்த அந்த அஞ்சா நெஞ்சனைப் போல் இதுவரை நான் யாரையும் காணவில்லை.

அழைப்பில்லாமலேயே நூற்றுக்கணக்கான கூட்டங்களுக்கு நான் அவருடன் செல்வேன். அப்போதெல்லாம் பேசுவதற்கு ஆள் இல்லாத காலம்.

அவருடைய குரலில் எழும்பும் எழுச்சி—வேடிக்கையான பேச்சு-மக்களைக் கவர்ந்துவிடும். சுயமரியாதை இயக்கம் தமிழ் நாட்டில் பரவியதற்குக் காரணமாயுள்ளவர்களில் அவர் முதன்மையானவர் என்பது என் எண்ணம்.

இந்தக் கட்சியில் எந்தப்பதவியும் அவருக்குக் கிடைக்கவில்லை. அவரும் அதை விரும்பவில்லை.

தமிழர் பெரும்படை புறப்பட்டபோது படையை நடத்திச்செல்லும் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான தோழர்களை அவர் பெருந்தன்மையாக நடத்தியதோடு, குற்றம் செய்பவர்களையும் சும்மா விடுவதில்லை. தோப்புக்கரணம் போடச் செய்வார். பின்பு சிரித்துக்கொண்டு படையின் அவசியத்தை விளக்கி அதில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதைப் பொறுமையோடு எடுத்துச் சொல்வார். சுருக்கமாகச் சொன்னால் 'அவர் இல்லையென்றால் படை ஒற்றுமையோடு சென்றிருக்க முடியாது; பாதியில் முறிந்திருக்கும்' என்று பெரியாரிடமே சொன்னேன்.

படையில் நான் மட்டும் தான் அவர் சொல்படி கேட்கமாட்டேன். 'நான் படைத் தலைவி! நீ சொல்வதைக் கேட்கமாட்டேன்' என்று கூறுவேன்.

அதற்கவர், 'எனக்குப்பெயர் அஞ்சா நெஞ்சன் என்பது தெரியுமா?' என்று கிண்டலாகப் பேசுவார்.

கோபமே வராது; அப்படி வந்தாலோ யாரையும் லட்சியம் செய்யமாட்டார். மாயவரம் நடராசன்மீது அளவிலா அன்பு. அழகிரிக்குக் கோபம் வரச்செய்து பார்க்க வேண்டும் என்பதில் நடராசனுக்கு ஒரு வேடிக்கை. அழகிரி பேசும்போது இடையிடையே

● தொடர்ச்சி 11-ம் பக்கம்

## பூசாரி புடம் போட்ட தங்கக்கட்டி!

மதகுருவின் அருமருந்தன்னக் குழந்தைதான், பின்னர் பைபிளைய கொளுத்திப்போடும் இங்கர்சாலாக வளர்ச்சிபெற்றது! பாதிரியாவதற்காக படித்துவந்த பிள்ளைதான் நாத்திகத்தோடு தொடர்பு கொண்ட ஸ்டாலினாக வளர்ந்தது! அழகிரிசாமியும் அப்படித்தான்! பூசாரி ஒருவனோடு அவர் வைத்திருந்த உறவுதான் அவரைப் பகுத்தறிவுவாதியாக்கிற்று!

இதோ, அவரோடு பழகிய தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் இந்தக் கதையை கூறுகிறார்;

"பட்டுக்கோட்டையில் ஒரு மாரியம்மன் கோயில் உண்டு. அந்த மாரியம்மன் ஒரு பூசாரியினால் சிறை பிடிக்கப்பட்டிருந்தது. அப்பூசாரியின் பெயர் பக்கிரி சட்டாம்பிள்ளை. மாரியம்மனிடம் வரம் கேட்க வருகிற பக்தர்களுக்கு, மாரியம்மனின் வரப்பிரசாதத்தை வாங்கிக் கொடுக்கிற நேரம் போக, மிச்ச நேரங்களிலெல்லாம் அழகிரியின் சிந்தனையைக் கிளறிக் கொண்டு இருப்பது தான் பூசாரி சட்டாம்பிள்ளையின் பொழுது போக்காக இருந்தது. சிறுவயதில், பாதிரிகளின் பள்ளியிலே பெறத் தவறிவிட்ட கல்வியை, மாரியம்மன் கல்லூரியிலே பெற்றுத் தேர்ந்துவிட்டார் அழகிரி!

"பூசாரித் தொழிலின் உள் ரகசியங்களை எல்லாம் பூசாரி சுட்டிக்காட்டிவிட்டார். 'கடவுளைக் கல்லாக வைத்திருப்பதே பூசாரிகளின் பிழைப்புக்குத்தான்' என்று சட்டாம்பிள்ளை சண்டமாருதமாகப் பேசுவாராம்.

ஒருமுறை பூசாரியின் கைசெலவிற்குக் காசு கிடைக்கவில்லை. மாரியம்மன் தீபத்திற்குக் காசு வேண்டுமென்று சாக்கு கூறிக்கொண்டு, மாரியம்மன் பக்தர்களிடமெல்லாம் சென்று, வெறுங்கையோடு மனமுடைந்து திரும்பிவிட்டார் பூசாரி. கோயிலுக்குத் திரும்பிவந்து அங்கிருந்த உண்டியைத் திறந்து பார்த்தார். அதிலே பணம் இருப்பதற்குப் பதில் விடலைப் பாம்பு ஒன்று படுத்திருக்கக் கண்டார் பூசாரி. பணம் கிடைக்காத ஆத்திரத்தாலும், பாம்பிருக்கக் கண்ட பயத்தாலும் பக்கிரி சட்டாம்பிள்ளை இரைச்சலிட்டார். அது சமயம் அங்கிருந்த அழகிரி, 'ஏன் சட்டாம்பிள்ளை இரைச்சல் போடுகிறாய்?' என்று கேட்டார். 'எஜமான்' என்று கூப்பிட்டுவிட்டு, பக்கிரி,

"சடல் வத்திக் கருவாடு தின்ன
குடல் வத்தி செத்துச்சாம் கொக்கு"

என்ற உவமையைக் கூறினாராம். சாகும் வரையில் இந்த உவமையை அழகிரி அடிக்கடி கூறத் தவறினதே இல்லை. 'ரதகஜ துரகபதாதிகள், ஓட்டை ஒடசல், செம்பு, பித்தாளை, பேரிச்சம் பழம், டண்டணார், டஸ்' ஆகிய சொற்கள் அனைத்தும் மாரியம்மன் கோயில் பூசாரியிடம் அழகிரி கற்றுக் கொண்டவையாகும். 'ஏனையா பண்டாரம் ஆண்டி ஆனீா,' என்று ஒருவர் கேட்க, 'இப்படி ஒரு மண்டலம் இருந்து பார்ப்போம்' என்று ஆண்டி பதில் கொடுத்ததாக அழகிரி கூறுவதும் மாரியம்மன் கோயில் பதிப்புத்தான். அழகிரி போக்கு வேறு வகையில் திரும்பியது ஏறத்தாழ இந்தக் காலத்தில்தான்."



# தலையங்கம்

சென்னை 25—3—55 வெள்ளி

## அண்ணாவின் யோசனைகள் !

18-ம் நூற்றாண்டின் இறுதிக்காலத்தில் பிரான்சு நாட்டு எரிமலை, புரட்சி என்னும் பெயரில் நெருப்புக்குழம்புகளைக் கக்குவதற்கு முன்னர், அங்கே பொதுமக்களைச் சுற்றி உருவாகியிருந்த சூழ்நிலைகளை **தாமஸ் கார்லைல்** என்னும் அறிஞர் பெருமகன் இப்படி வர்ணிக்கிறான் :

> " கஷ்ட ஜீவனம் செய்யும் மக்களின் நிலை என்ன ? வழக்கம் போல் மோசந்தான். ஐயோ, பாவம்! அவர்களுடைய தொகை கொஞ்சமா, என்ன ?...அவர்களைத் தனித்தனி மனிதர்களாகப் பிரித்தறிவது நமக்குக் கஷ்டமாகத்தானிருக்கிறது...அவர்களையெல்லாம் ஒரு கூட்டாகச்சேர்த்து 'இழிந்த சாதிக்கூட்டம்' என்கிற ஒரே தலைப்பினால் ஒன்று சேர்த்துவிடலாம். அல்லது இன்னும் கொஞ்சம் கௌரவமாகவும், மனிதாபிமானத்துடனும் குறிப்பிடவேண்டுமானால் 'பாமர மக்கள்' என்று அவர்களைச் சொல்லலாம். ஆமாம்; பாமர மக்கள்தான். ஆனால் சிறிது கற்பனா சக்தியை வரவழைத்துக்கொண்டு அவர்களைப் பின்தொடர்ந்து சென்று பாருங்கள் ! அவர்கள் பிரான்சு முழுவதும் பரவியிருக்கிறார்கள். அவர்களுடைய மண் குடிசைகளுக்கும், குச்சி வீடுகளுக்கும் சென்று பார்த்தால் அவர்களும் நம்மைப்போல் உண்மையான மனிதர்கள் என்பதைக் காண்பீர்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் சொந்தத்தில் ஒரு இருதயம் இருக்கிறது. ஒவ்வொருவருக்கும் துன்பங்கள் இருக்கின்றன. ஒவ்வொருவருடைய உடலையும் தோல்தான் மூடியிருக்கிறது. ஒவ்வொருவருடைய உடலையும் கீறிப்பார்த்தால் இரத்தம் கூட வரும்."

—கோலாகலபுரியில் உலவிய ஆணவக்காரர்கள், மனிதஜந்துக்களென்று நினைக்க மறந்துவிட்ட பிரெஞ்சு மக்களைப் பற்றித்தான் கார்லைல் இவ்வாறு எழுதினான். இந்த வாசகங்களைக் குறிப்பிட்டு மோதிலால் மைந்தர் தன்னுடைய சிறைக் கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறார் தெரியுமா ?

> "மேல்கூறிய வர்ணனை 1789-ம் ஆண்டு பிரான்சுக்கு மட்டுமா பொருந்துகிறது! 193?-ம்ஆண்டு இந்தியாவுக்கும் அது நன்கு பொருந்தும். இந்தியாவில் வாழும் கோடிக்கணக்கான குடியானவர்களையும், தொழிலாளர்களையும் நம்மில் பலர் "பாமர ஜனங்கள்" என்கிற பெயரில் அடக்கிவிடுகிறோமல்லவா ?..."

—இப்படி வினவுகிறார், பண்டிதர். வெள்ளையன் கால இந்திய மக்களது நிலைமை கார்லைலினுடைய படப்பிடிப்பை ஒத்திருந்ததாம்-எழுதுகிறார் ஜவகர்!

—இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் தென்னகத்து கைத்தறியாளரது வாழ்வுகூட, கார்லைலும், நேருவும் எடுத்துக்காட்டிய பரிதாபகரமான நிலையிலேதான் அமைந்திருந்தது. வானவில்லின் வர்ணஜாலங்களைப் பழிக்கும் அளவிற்கு, கண்ணையும், கருத்தையும் கவரும் புத்தாடைகள் செய்து தந்தவர்கள் வாழ்விலே, ஒளிசிந்தும் வர்ணங்கள் இல்லை; விழி சிந்தும் நீரிலேதான் அவர்களுடைய வாழ்க்கைப் படகு மிதந்தது!

குழந்தை விற்றார்கள்! மீளாத வறுமைத் துயரத்தில் உழன்றார்கள் ! சென்னையின் அழகான வீதியெல்லாம் அவர்களுடைய பட்டினி ஊர்வலம் வந்தது! பிரதமரைப் பார்த்தார்கள்; ஏனைய காங்கிரஸ் பிரமுகர்களைச் சந்தித்து தங்கள் குறைகளை எடுத்தோதினார்கள். சேலம் போன்ற இடங்களிலே அவர்கள் கட்டவிழ்த்து விடப்பட்ட அடக்குமுறைகளையும் சந்திக்கவேண்டியிருந்தது!

இந்த ஆண்டு சோகம் கப்பியிருந்த அவர்கள் நிலையிலே ஒரு மாற்றம் காணப்பட்டாலும், கைத்தறிகளுக்கு இன்னும் பழைய சோபிதம் வந்து சேர்ந்தபாடில்லை.

**அமைச்சரவையின் குறிப்புப்படி சுமார் 50-லட்சம் ரூபாய்கள் மதிப்பிடத்தக்க கைத்தறி ஆடைகள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களிலே முடங்கியிருக்கின்றனவாம். இந்தச் சரக்குத் தேக்கம் சென்னை மாநில அரசினரின் கூட்டுறவு நிலையத்தில் மட்டும்தான் ! தனிப்பட்டோரின் கடைகளில் தேங்கியிருக்கும் துணிகளின் மதிப்பீடு இதைவிட அதிக அளவு இருந்தாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை!**

இந்த நிலை ஏற்படாதவாறு தடுப்பதற்குத்தான் இந்த வாரத்தை கைத்தறி வாரமாகக் கொண்டாட ஏற்பாடு செய்திருக்கின்றனர். இது சம்பந்தமாக நடைபெறும் விழாக்களிலே நாடாளும் அமைச்சர்கள் கலந்துகொண்டிருக்கின்றனர்; நாடாண்டு, இப்போது துறவு பூண்டிருக்கும் ஆச்சாரியார் கூட 'கல்கி' இதழிலே அறிக்கையொன்று வெளியிட்டு ஆதரவு காட்டியிருக்கிறார்!

நமக்கெனவே கைத்தறி வாரமொன்றை அமைத்துக்கொண்டு, அந்த நாட்களிலே கைத்தறி ஆடைகளை தோளிலே சுமந்து விற்றவர்கள், நாம்! பொதுக் கூட்டங்களிலும், மாநாடுகளிலும், பூமாலைக்குப் பதில் கைத்தறி துணி மாலைகளைத் தாங்கி, தூங்கும் தறிகளை விழிப்படையச் செய்ய, நம்மாலான ஆதரவுகளைத் தந்தபடி இருக்கிறோம்.

நாம் துணி விற்ற நேரத்தில் கூட்டுறவு சங்கங்களில் அதிகமான கைத்தறி ஆடைகள் விற்பனையானதுகண்டு நிதி அமைச்சரே திகைத்துப்போயிருக்கிறார்! அந்த அளவுக்கு நெசவாளரின் நல்வாழ்விலே ஈடுபாடுடைய நாம், அவர்கள் துயர் போக்க, அரசினர் செய்வதாகச் சொல்லிக் கொள்ளும் ஒவ்வொரு திட்டத்தையும் மிகவும் நுட்பமாகக் கவனித்து வருகிறோம்.

ஆலை அரசர்கள் காங்கிரஸ் அரசாங்கத்தின் பாதுகாவலராக இருக்கின்ற வரையில் நெசவாளரின் துன்பச் சுமை குறையப்போவதில்லை; பட்டினி கிடக்கும் அவர்களது வீடுகளிலே சோறு பொங்கப் போவதில்லை!— என்பதுதான் இதுநாள் வரை நாம் கண்ட முடிவு. டெல்லி அரசாங்கம் அவ்வப்போது கண் துடைப்பு வேலைகளைச் செய்து முடிப்பதையே, நெசவாளரின் துயர் துடைக்கும் பணியென்று பொதுமக்கள் நினைக்கும் வகையில் ஒரு போக்கு காட்டிவிட்டு, மூலையில் பதுங்கிவிடுகிறது. உண்மையில் டெல்லி மூலவர்களுக்கு நெசவாளரை வாழவைக்கும் நன்னோக்கு இருக்குமானால் ஆச்சாரியார் கொண்டுவந்த திட்டமாம், கைத்தறிக்கென வேஷ்டி, புடவைத் தயாரிப்பை ஒதுக்கிட வேண்டுமென்ற கோரிக்கையை— நிறைவேற்றி வைத்து இப்போது கைத்தறிக்கென்று திருவிழாக்கள் நடத்த வேண்டிய அவசியத்தையே தடுத்திருக்கலாம்.

செய்தார்களா அவர்கள்? எப்படிச் செய்வார்கள்? வடக்கத்திய ஆலை முதலாளிகள் இட்ட எருவிலே வளர்ந்த டில்லி அரசாங்கம் ஆச்சாரியாரின் யோசனையை ஏற்க மறுத்ததில் ஆச்சரியமொன்றுமில்லை! அந்த வடநாட்டு வேட்டுவர்களிடம், இந்த புள்ளிமான் கூட்டத்திடம் காட்டுவதற்கு இரக்கம்தான் ஏது? நெசவாளர்பால் அலட்சிய போக்கு கொண்ட மத்திய அரசினருக்கு பாடம் கற்பிப்பதைப் போலத்தான் அறிஞர் அண்ணா அவர்கள் சென்னை கைத்தறி வார விழாவிலே அரசாங்கம் செய்யக்கூடிய இரண்டு யோசனைகளைக் குறிப்பிட்டார்கள்:

> "முதலாவதாக **இந்திய இராணுவத்தினருக்கு தரப்படும் ஆடைகளை கைத்தறி ஆடைகளாகவே மத்திய அரசாங்கம் வாங்க வேண்டும்**

> "அடுத்து, அதைப் போலவே **மாநில அரசாங்கமும் போலீஸ் இலாவுக்கான துணிகளை கைத்தறியாகவே வாங்கலாம்.** அவர்களுக்குத் தேவையான முறுக்கும், மினுக்கும் கொண்ட ரகங்களும் கைத்தறியில் நெய்யத்தான் படுகின்றன,

—அண்ணா அவர்களின் இந்த ஏற்றமிகு யோசனைகளை அரசினர் அமுலாக்கினால், இருட்டறையிலே அவதிப்படும் லட்சோப லட்சம் நெசவாளர்கள் இன்னல் நீங்கப் பெறுவர். நகரங்களிலும், நாட்டுப்புறங்களிலும் சிங்காரப் பண்ணெழுப்பிவரும் கைத்தறிகள், இரத்தம் குடிக்கும் 'ஆலையப்பர்'களின் ஓநாய்ப் பார்வையிலிருந்துகூட தப்பலாம்! அப்போதுதான் நெசவுத் தொழில், பூண்டோடு அழிந்துபோகு முன்னரே அதற்குக் கைகொடுத்து உதவிய நல்ல பெயரும் இந்த அரசாங்கத்தை நாடிவர முடியும்!

### ஆசிரியர் மு. க. உடல் நிலை

ஆபரேஷனுக்குப் பிறகு கண்ணிலே போடப்பட்டிருந்த கட்டு, சென்ற புதன்கிழமையன்று டாக்டர்களால் பிரிக்கப்பட்டது. அடுத்த வாரம் சுகமாக வீடு திரும்பி விடலாமென்றும் கூறியுள்ளனர். இப்போது ஆசிரியர் நலமுடனிருக்கிறார் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அஞ்சா நெஞ்சன்!

( இரா. செழியன், எம். ஏ. )

இன்று சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகள் பல நாட்டில் பரவிவிட்டன.

ஆரம்பகாலத்தில் வெறுப்புடனும் வேடிக்கையுடனும் நகையாடிய கருத்துக்கள் இன்று நாட்டு மக்களின்பழக்க வழக்கங்களில் கலந்துவிட்டன. இடக்கம், ஒப்புக் கொள்ளப்பட்ட சக்தியாகிவிட்டது. ஆரம்ப காலம்! அதன் சூழ்நிலையைக் காண, கால் நூற்றாண்டு பின்னால் போகவேண்டும். வரப்பும், வாய்க்காலும் பெற்றுக் குளுமையுடன் விளங்கும்வயலையும், அதன் பக்கத்தில் நெற்குவியலையும், மலைபோல் அடுக்கப்பட்ட வைக்கோலையும் பார்ப்பவருக்கு அந்த இடம் வயலாக இல்லாமல், காடு நிலமாக இருந்ததை உணர முடியாது. சுயமரியாதை இயக்க ஆரம்ப காலத்தில் தமிழகமும் அத்தகைய காட்டு நிலமாகத்தான் இருந்தது. நாட்டிய கல்லை கடவுளென வணங்கி, நீட்டிய ஓலையை வேதமென மதித்து, சொல்லிய ஆணைகளெல்லாம்அடிபணிந்து, வருவார்க்கும் போவார்க்கும் வேட்டைக் காடாகத் தமிழகம் இருந்தது. இந்த இருட்காட்டை அழிக்க முயன்றது சுயமரியாதை இயக்கம். அநாதி காலங்கொட்டு வந்த மூடநம்பிக்கைகள், பிறந்ததிலிருந்து இறக்கும்வரை தொடர்ந்து சித்ரவதை செய்யும் சாதிக் கட்டுப்பாடுகள், இவைகளை எதிர்த்து "மனு இயற்றியதா? இருக்கட்டுமே" — "மாந்தாதா எழுதியதா? பெயர் மாத்திரம் ஆதாரமாகாது" — "முழுமுதற் கடவுளின் படைப்பிலே இவ்வாறு..."; "சற்றுப்பொறு; இவ்வளவு அலங்கோலமான வாழ்வை நிர்மாணித்துப் பாதுகாக்கிற ஆசாமி யாரப்பா?" என்று ஒவ்வொரு தொடக்கத்திலும கேள்விகளைப் போட்டுப் பழமைப் பிடிப்பாளர்களைத் திணறச் செய்தது.

எத்தகைய வசதிகளும் இல்லாமல், உடைந்த ஏரையும், வலுவற்ற எருதுகளையும் வைத்துக்கொண்டு, காட்டு நிலத்தைக் கழனியாக்கப் பாடுபட்டவர்களைப்போல, சுயமரியாதை இயக்கம் ஆரம்ப காலத்தில முயன்றது. முயற்சி என்றால் கற்களுடன் மோதுதல், முட்செடிகளுடன் உராய்தல், நஞ்சுமிழும் நாகத்தின் சீற்றம், இவைகளைத் தாங்கிக் கொண்டு தம் உழைப்பையும், அதனால் கிடைக்கும் பலனையும் மட்டுமே நம்பியதின் ஆரம்பமாகும்.

அறியாமை என்னும் வேலியிட்டு, வறுமையெனும் அகழியை வெட்டி, பயம் என்னும் கோட்டைச் சுவருக்குள், விதி எனும் பட்டத்தரசன், பழக்க வழக்கமெனும் மந்திரிகளின் சொற்படி, சாதிகளென்னும் நால்வகைப் படைகளுடன், மதமெனும் கோவிலைக்காட்டி, நரகமெனும் சிறைக் தண்டனையை ஏற்படுத்தி, மக்களை ஆட்டி வந்த அரசாங்கத்தில் சுயமரியாதைப் படை திடீரென்று புகுந்தது.

நேற்று வரையில் அமைதி; இன்றோ நாடே அமர்க்களமாகிவிட்டது. போராட்டம் எல்லைப் புறத்திலிருந்து ஆரம்பிக்கவில்லை. எங்கும் சண்டை; நாற்புறத்திலும் தாக்குதல் மின் வேகத்தில் பரவியது. அறியாமைஎனும் அரண் பிய்த்தெறியப்பட்டது. பயம் எனும் கோட்டைச் சுவர் இடிந்துவிட்டது. எவரும் நினைக்காதது; மறுக்க முடியாதன என்று கட்டப்பட்டிருந்த மதக்கோட்பாடுகள், அசைக்க முடியாதன என்று காட்டப்பட்ட ஆகம வேத உதாரணங்கள், மூடப் பழக்க வழக்கங்கள், சாதிக் கட்டுப்பாடுகள், அவன் செயல், விதி, இவைகளனைத்தும் தூள், தூள், தூள்!

மற்ற நாடுகளில் பகுத்தறிவு இயக்கங்கள் பரவியதற்கும், நம்நாட்டில் சுயமரியாதை இயக்கம் வேலை செய்வதற்கும் வித்தியாசம் இருக்கிறது. அங்கெல்லாம் சித்தாந்த முடிவுகள் அறிஞர்களால் ஆராயப்பட்டு, ஏடுகளில் எழுதப்பட்டு, பின் பலப்படுத்தப்பட்ட கருத்துகள் மக்களிடை சிறிது சிறிதாகப் பரவின. இங்கோ அந்த ஆராய்ச்சிகளே பொதுக் கூட்டங்களின் மத்தியில்தான் ஆரம்பிக்கப்பட்டன. சுயமரியாதை இயக்கம் பேசாத பிரச்சினை கிடையாது. சிந்திக்காத கருத்துக் கிடையாது. கடவுள் தோற்றத்திலிருந்து கர்ப்பத்தடை வரை சுயமரியாதை மேடைகளில் பேசப்பட்டன. நீண்ட போர்முனை; பக்தர்களின் கோபத்துடன் பணபலமும் சேர்ந்த தாக்குதல். இவர்களோ, சிறிய தொகையினர். எனினும் போராட்டம் நடந்தது. அவ்வாறு சுயமரியாதையின் ஆரம்பக் கட்டத்தில் முதற்படையினர் வரிசையில் நின்ற பலருள் தோழர் அழகர்சாமியும் ஒருவர்.

"தம்பட்டம் அடிக்கிறாளே, ஏன்?"

"இன்றைக்குச் சுயமரியாதைச் சங்கக் கூட்டமாம்!"

"சுயமரியாதைச் சங்கமென்றால்...?"

"சீர்திருத்தம் வேண்டுமென்கிறார்கள்"

"நானும் அதைத்தான்சொல்லிக் கொண்டிருக்கிறேன். இந்த ரோட்டில் குழிகள் அதிகமாகிவிட்டன. என் வீட்டுப் பக்கத்தில் விளக்குக் கம்பம் இல்லாமல் இருட்டாக இருக்கிறது. இவற்றையெல்லாம் சீர்திருத்தம் செய்ய வேண்டும்."

"அவர்கள் கூறுவது இதையல்ல; சமூகத்தில் சீர்திருத்தம் செய்யவேண்டும் என்கிறார்கள்"

"சமூகத்தில் சீர்திருத்தம் செய்ய என்ன இருக்கிறதாம்?"

"ஏன்; சாதி சமயங்கள்போக வேண்டும்!"

'அதெப்படியப்பா; தொன்று தொட்டு வந்தது, விதியின் செயல், வேதத்தின் சாரம், நான்முகன் படைப்பை நலிவும் ஒண்ணுமோ! அதில் நாம் குறை கூறுவது அடாதப்பா."

"விதியா? அப்படியொன்று கிடையாது;வேதங்கள்கற்பனை கதைகள் என்று கூறுவார்கள்"

'ஆ!'

பக்தனாயிருந்தால் மூர்ச்சை போட்டிருப்பான்; பாமரனாயிருந்தால் பேச முடியாத அளவுக்குத் திகைத்துப் போயிருப்பான். மக்களிடை அதிர்ச்சியை உண்டாக்குமளவுக்கு இயக்கத்தின் கொள்கைகள் இருந்தன. அதிர்ச்சியை தொடர்ந்து வெறுப்பு, கோபம், சமூகக் கட்டுப்பாடு இவைகள் உண்டாயின. சுயமரியாதைக்காரன் என்று சொல்லிக் கொள்வதற்குத் துணிவு அதிகம் வேண்டும். கூட்டம் ஒன்று போடுவதென்றால் ஆபத்தை அழைப்பதாகத்தான் அர்த்தம். பெற்றோர்களின் கண்டிப்பு, பள்ளிக்கூடத்தில் தண்டனை, உற்றார் உறவினரின் ஏச்சு, இவைகளையும் தாண்டிக் கொண்டு இளைஞர்களும், அறிவு வளர்ச்சியில் நம்பிக்கை கொண்டவர்களும் சுயமரியாதை கூட்டங்களுக்கு வரத்தான் செய்தார்கள். மக்களின் கவனத்தை தம்பக்கம் ஈர்ப்பதற்கும், புதிய கருத்துக்களைப்பரப்புவதற்கும் பேச்சுத் திறமை வேண்டியிருந்தது. கோபத்துடனும், வெறுப்புடனும் வந்தவர்கள், பேச்சிலே ஈடுபட்டு, கூட்டம் முடிந்து போகும்பொழுது "இவர்கள் சொல்வதிலும் ஏதோ இருக்கிறது" என்று தம்முடைய அமைதிக்கு சமாதானங் கூறுமளவுக்காவது, திரும்பும் வகையில் கூட்டத்தினரைக் கவரும் பேச்சுத் திறன் படைத்தவர்களே சுயமரியாதை கூட்டங்களில் பேசமுடிந்தது. சுயமரியாதை இயக்கம் வளர்ந்ததற்குக் காரணமாயிருந்தவர்கள் இவர்களே. இயக்க கொள்கைகள் காரமான மருந்தைப் போலிருந்தன. அவற்றைக் கொடுக்கும்பொழுது இதமாகப் பேசி, கொஞ்சம் இனிப்பையும் கலந்து. கோபப்பட்டால் வேடிக்கைகளைக் காட்டி, கோபம் தணிந்ததும் மருந்தின் அவசியத்தைச் சொல்லி மக்களிடம் இயக்கக் கருத்துக்களை பரப்பிய தன்மை அழகர்சாமிக்கே உரியது! ★

## ★ அழகிரி குடும்பம் ★

★

படத்திலிருப்பவர்தான் அழகிரியின் வாழ்க்கைத் துணைவியார். பெயர் எதிராஜம்மாள். அவர்கள் கையிலிருப்பதுதான் அழகிரியின் பேரக் குழந்தை-மூத்தமகள் டயானுவின் புதல்வன்! விதவையான எதிராஜம்மாள் இப்போது பட்டுக்கோட்டையில்தான் வாழ்கிறார்கள்!

★



## இருபது ரூபாய்கள்!

கோபத்தோடு கேட்டார்; 'ஏன் கொடுத்தீர்கள்? எப்படிக் கொடுக்கலாம்' என்ற அதிகார ஆவேசம் அவருடைய வார்த்தையில் எதிரொலித்தது!

எதிரே நின்றவர் இதை எதிர்பார்க்கவில்லை. எனவே திகைத்தார், 'இவரா இப்படிக் கேட்கிறார். நாம் என்ன செய்துவிட்டோம்? வந்தவர் வழிச்செலவுக்குப் பணமில்லை என்று திண்டாடினால், அதைக் கண்டு இரக்கங்கொண்டு இருபது ரூபாய் கொடுப்பதா குற்றம்?' என்ற கேள்விகள் அவர் இருதயத்தில் எழும்பலாயின.

"என்னுங்க யோக்கியதை. என்னமோ, அவன் கேட்டான், நான் கொடுத்துவிட்டேன் என்று பதில் சொல்லிவிட்டா போதுங்களா? கொஞ்சங்கூடப் பொறுப்பு வேணுங்களா?—தயவு செய்து மன்னிச்சுகங்க. இப்படியெல்லாம் நடக்கப்படாதுங்க!" இப்படி வார்த்தைகள் வந்துகொண்டிருந்தன, 'இருபது ரூபாய்தானே' என்று சாதாரணமாக எண்ணித் தகவல் கூறவந்தவரை நோக்கி.

'இருபது ரூபாய்தானே. எதற்காகக் கொடுத்தீங்க...ஊருக்குப் போகப் பணமில்லையென்று? சரி, சரி. அவர்தான் என்ன செய்வார்! பரவாயில்லை!' இப்படி பதில் வருமென்று எதிர்பார்த்தார். எனவேதான் கூறினார், "ஊருக்குப் போக பணமில்லைன்னு கேட்டாருங்க; இருபது ரூபாய் கொடுத்தேனுங்க" என்பதாக!

கேட்டவர் முதலாளியல்ல—எதிரே நின்றவரும் அவருக்கு அடிமைப்பட்ட குமாஸ்தாவல்ல! எனினும் அவர் கேட்டார் ஆத்திரத்துடன்—இவர் திகைத்து நின்றார் ஆச்சரியத்துடன்!

தகவலை சொன்னவர் ஜில்லா கழகத்தின் செயலாளர். எனினும் கணக்கு ஒப்புவித்தார்-பின் கவலைப்பட்டார்: "ஐயா, ரொம்ப ஆத்திரப்படராருங்க...என் மேல் என்ன தப்பு......ஊருக்குப்போக பணமில்லைன்னு, கஷ்டப்பட்டா, அனுப்பி வைக்கிறது நம்ப பொறுப்பு இல்லீங்களா...நான் தனே அவரை கூப்பிட்டிருந்தேன் ......இதிலென்ன தப்பு?" என்று கூறினார்-தன்னைக் கேட்டவரிடமல்ல-தனது நண்பர்களிடம்!!

* * *

அவர் வந்தது அவசர அழைப்பைக்கண்டு-பொதுக்கூட்டத்தில் பேசவேண்டும் புறப்படுக-என்ற தந்திச்செய்தி தள்ளாத நிலையிலிருந்த அவரை ஓடிவரச் செய்தது சென்னைக்கு!


வந்தார்—வந்ததும் 'இரகசியக் கமிட்டிக் கூட்டத்திற்கும்' சென்றார்; எதிர்பாராதவிதமாக பிடிபட்டோர். எல்லோரையும் போலீசார் கைது செய்தனர்—இவர், விரும்பியிருந்தால் தன் உடல்நிலையைக் கூறித் தப்பியிருக்கலாம். எனினும் அந்த அஞ்சாநெஞ்சன் அவ்வழியை விரும்பவில்லை! சிறைக்குச் சென்றார், தனது சகாக்கள் நூறுபேருடன்!!

"கவர்னர் ஜெனரல் சி. ஆர். சென்னைக்கு வந்து திரும்பியதும்" கதவு திறக்கப்பட்டது-கொண்டு போய் பூட்டி வைக்கப்பட்ட கழகப் பிரமுகர்கள், தலைவர் எல்லோரும் திறந்துவிடப்பட்டனர்!

# இலட்சியவீரன்! எங்கள் அண்ணன்!!

இராம. அரங்கண்ணல்

எலும்பை நோய்க் கிருமிகள் உருக்கி, உடலைக்கூருக்கிக்கொண்டிருந்தபோதும் கலங்காது, முந்நூறு மைல்கள் ரயில் ஏறிவந்து சிறைச்சாலை சென்று, ஆறு நாட்கள் அவதிக்குப்பின், சோர்வின் பிம்பமாய் திரும்பிய அவருக்குத்தான் இருபது ரூபாய் தேவைப்பட்டது.



கேட்டார்-இல்லாத காரணத்தால்! கொடுத்தார்-அவரைநாம் அழைத்ததால்தானே வந்தார் என்று எண்ணிக்கொண்டு.

கோபித்தார்—கொடுத்தவரான தோழர் கே. கோவிந்தசாமியைப் பார்த்து கட்சியின்தலைவர். உடனே கடிதம் எழுதி, "இருபது ரூபாயையும் இங்கு அனுப்பிவிட்டு மறுவேலை பார்க்குமாறு கண்டித்து எழுதுங்கள்" என்றும் உத்தரவு போட்டார்!

கேட்டு வாங்கிச் சென்றவருக்கு 'இருபது ரூபாய்கள்' சாதாரணமானதல்ல; கேட்கச் சொன்னவருக்கோ மிகமிகச் சாதாரணத் தொகை. எனினும், எழுதச் சொன்னார், ஆத்திரத்துடன்!!

* * *

கடிதம் எழுதப்பட்டதா, என்ன பதில் வந்தது, என்ற விஷயங்கள் நமக்குத் தெரியாது—அடுத்த முறையாக "இருபது" வாங்கிச் சென்றதற்காகக் கோபத்துக்காளான அந்த அஞ்சா நெஞ்சனை நாம் காணமுடியவில்லை! சம்பவம் நடந்த சில மாதங்கள் கூட முடியவில்லை—அருமை வீரர் அழகர்சாமி, நம்மை விட்டுப் பிரிந்து விட்டார் என்ற சோகச் செய்தி நம்மைக் கலங்கவைத்தது.

இயக்கமே தன் வாழ்வு என்று வாழ்ந்து வீழ்ந்த அம் மாவீரன்—தலைவர் அறிக்கையைக் கண்டதும் கமிட்டிக் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம்—'கவர்னர் ஜெனரலுக்கு கருப்புக் கொடி பிடிப்பதைக் காணலாம்' என்ற ஆசை துடிக்க, அதே நேரத்தில் பொதுக்கூட்டத்தில் பேசவேண்டிய கடமையும் இருக்கிறதே என்ற கவலை தூண்ட ஓடி வந்தார்.

'வா, சிறைக்கு' என்று அழைப்பு வந்தது ஆள்வந்தவரிடமிருந்து. பின்வாங்கவில்லை—இருமல் ஈரல்குலையை உலுக்கிக் கொண்டேயிருந்தது; எனினும் சிறைக்குச் சென்றார்!

திரும்பி வந்ததும் ஊருக்குச் செல்ல பணமில்லாததால் கேட்டு வாங்கிச் சென்றார் 'இருபது ரூபாய்'. அதைத் திருப்பியனுப்பும்படி உத்தரவிடப்பட்டது, தலைவரால்.

நெஞ்சத்தைக் குலுங்க வைக்கும் நிகழ்ச்சி இது. "உழைத்தேன்; ஊரறிய உன்பேரைச் சொன்னேன்; ஒரு நாளும் ஒரு வார்த்தை மறுத் துரைத்து நானறியேன; அப்படிப் பட்ட எனக்கா இந்த நிட்டோலை, கண்டிப்புக் கடிதம்!" என்று எண்ணியிருக்கும் அந்த இரும்பு நெஞ்சனின் இதயம்!

வாள் உயிரைப் போக்கும்; வார்த்தைகள் உயிரைச் சித்திரவதை செய்யும்—துண்டு துண்டாகத் துளைத்துப்போடும்!

மறைந்த மாவீரர் வாழ்க்கையில் ஏற்பட்ட சித்திரவதை நிகழ்ச்சிகள் பலவுண்டு,

கடைசி மூச்சுக் காற்றில் கலக்கும் போதுகூட 'கவலை' அவரை விட்டு விலகவில்லை; 'கஷ்டம்' அணைத்துக் கொண்டுதானிருந்தது!

கவலை—கஷ்டம்—கடன், அவரது வாழ்க்கையை வதைக்கும் தூதுவர்களாயிருந்தன! மனைவியின் குமுறல், தாயின் சங்கடம், குழந்தைகளின் ஆசை—அத்தனையையும் தாங்கிக் கொண்டு பொது வாழ்வுப் பாதையில் பெருமிதமாகப் பவனி வந்தார் அவர்.

நடப்பது காட்டுப்பாதை. நச்சுப் பாம்பு, கொட்டுந் தேள், புயல், முள், கல், எல்லாம் இருக்கும் என்று தெரிந்தும் அவர் அவ்வழி புகுந்தார்—நடந்தார்—நம்மையும் இட்டுச் சென்றார்!

வசதியான வாழ்வு, இட்ட வேலையைச் செய்ய எடுபிடிகள், எதையும் சாதித்துக் கொள்ளப் பணம்—எனவே எதாவது வேறு வேலை செய்யலாம் என்று இயக்கத்தில் நுழைந்தவரல்ல அவர். பொதுவாழ்வு ஒரு பூங்கா—வீட்டில் வெம்மையடிக்கிறது, எனவே வெளியேறிச் சிறிது காலம் அங்கிருப்போம் என்று நினைத்தவரல்ல அவர்.

பொதுச் சேவை ஒரு பாலைவனம், அனல் பறக்கும் காற்று, தணல் கொதிக்கும் மண்வெளி—இதுதானே! பரவாயில்லை, நடக்கிறேன்; இலட்சியச் சோலையைக் காண்கிறேன் என்ற வீர மூச்சோடு இருந்தவர்.

சாதியும் பேதமும் நிறைந்த சமுதாயம், அங்கு சனாதனமும் வைதீகமும் செய்யும் கோரத் தாண்டவம், அவர் இதயத்தைக் கசக்கியது; 'என்வேலை அதோ கிடக்கிறது. என் வீடே இந்த

★ தொடர்ச்சி 6—ம் பக்கம்

## சிப்பாயாக மாறினான் சிங்க நெஞ்சன்!

இமயம் வரை சென்றோம்; கடாரம் கொண்டோம்; இலங்கையை வென்றோம்—என்று பழந்தமிழ் இலக்கியங்கள் பறைசாற்றுகின்றனவல்லவா? அழகர்சாமியும் தாயகம் தாண்டும் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டது. திரவியம் தேடுவதற்காக அல்ல; திராவிடத்தாயின் மற்ற சேய்களைப் போலவே குடல் நிரப்புவதற்காக! பள்ளி வாழ்வு முடிந்ததும் அவரது வாழ்விலே புகுந்த சூறாவளி, தந்தையை இழந்த அழகிரியை ஒரு போர் வீரனாக்கிற்று. முதல் உலக யுத்தத்தின் போது கையிலே துப்பாக்கியைத் தூக்கியபடி மத்திய ஆசியாவிலுள்ள மெசோபெட்டோமியோ வரை சென்று போர்ப் பணியாற்றினார்.



தலைகொய்யும் பீரங்கிகள்—மலைபோல் நிற்கும் எதிரிப் படைகள்—இவைகளைப் பார்த்துகூட அழகிரி மலைத்ததுண்டு; 'இவர்களை எதிர்க்க முடியுமா' என்று ஒருகணம் தயங்கியதுண்டு! ஆனால், நம் சமுதாயம் கெடுக்கும் களையாக முளைத்துவிட்ட ஆரியத்தை எதிர்க்க, அவர் ஒருபோதும் தயங்கியதில்லை. தினவு கொண்ட தோள்கள், விம்மித் தணியுமுன்னரே சமாதியாகிவிட்டது, அந்தத் தங்கக்குன்றம்!

# தொழிலாளர் இதயம் கவர்ந்திட்ட காந்தம்!

திக்கு திசை யறியாத சேய்களாய்—வாயும், வயிறுமற்ற பூச்சிகளாய், தொழிலாளர்கள் வாழ்ந்தகாலம், அது! தென்னிந்திய இரயில்வே ஒர்க்ஷாப் நாகையிலிருந்து திருச்சிக்கு மாற்றப்பட்ட ஓராண்டுக்குப் பின்னர் தொழிலாளர்கள் மாபெரும் வேலை நிறுத்தம் ஒன்றைத் துவங்கினார்கள். அந்தப் பாட்டாளிகளின் போராட்டத்திலே பெரும்பங்கு கொண்டு, திரு லிங்கம் அண்ணா சொல்வது போல, "இயக்கத்திற்கும், தொழிலாளர்களுக்கும் ஓர் பிணைப்பை உண்டாக்க வேண்டுமென்று முயன்றவர்களிலே அழகிரிசாமி அவர்கள் முதன்மையானவர்."




போத்தனூரிலிருந்து, மங்களூர் வரையில் வேலை நிறுத்த மேற்பார்வையாளராக அழகிரி வேலை செய்துவந்தார். இரயில்வேயில் வேலை செய்யும் 'காங்மென்'களைப் பற்றிக் கவனிக்கும் வேலையும், அந்தந்தத் தொகுதி லேபர் கமிட்டிகளைப் பார்வையிடும் வேலையும் அழகிரியிடமும், தொழிலாளர் தலைவர் சுவர்ணு என்பவரிடமும் ஒப்படைக்கப் பட்டன.

'அண்டர் கிரவுண்ட்' புரட்சி தங்களுக்கே சொந்தம் என்று சொல்லி இன்று கதையளக்கிறார்களே சிலர், அவர்கள் அன்று அழகிரியோடு சுற்றுப் பயணம் செய்திருந்தால் உண்மையான புரட்சிக்காரர்கள் யாரென்று தெரிந்திருக்கும்! 'இவர்களுடைய வருகைபற்றி ஒவ்வொரு ஊர் போலீஸ் ஸ்டேஷனுக்கும் தந்தி கொடுக்கப்பட்டது. போலீசாரின் 'கெடுபிடி'களுக்குத் தக்கபடி அழகிரியும், சுவர்ணுவும் தங்கள் சுற்றுப் பயணத்தை மாற்றி அமைத்துக் கொண்டார்கள். ஒவ்வொரு மாவட்டத்திற்குள் நுழையும்போதும், தாங்கள் ஏறிவந்த மோட்டாரின் நம்பரை மாற்றிவிட்டு, அந்தந்த மாவட்டத்து நம்பரை சொருகிக் கொள்வார்கள். இந்த முறையில் மூன்றே நாட்களில் ஒன்பது ஜில்லாக்களுக்குச் சென்று பணியாற்றினாராம் அந்தக் கொள்கைச் சீயம்!

குமுறும் கடல்போல, ஓய்வு ஒழிவின்றி உழைத்து தொழிலாளரின் சுகவாழ்வுக்காக அந்த உத்தமன் கண்ட கனவுகளை பேரூர் முடிவுகள் நனவாக்கிவிட்டன. தி. மு. கழகம் நேரடியாக தொழிற்சங்கம் அமைப்பதில் பங்குபெற வேண்டுமென்ற பொதுக்குழு முடிவு, மறைந்த மாவீரனின் கல்லறை மீது நாம் குவிக்கும் மலர்ச் செண்டுகள்! தேன் துளிகள்!

## இலட்சிய வீரன்......

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

நாடு. என் கடமை அதைச் செப்பனிடுவது' என்று கூறிக் கொண்டு தொடங்கினார்—வாலிப காலத்தை வளரும் இயக்கத்திற்கு விருந்தாக்கினார்! அவர் 'வாழ' வில்லை—பலரை வாழச் செய்வதற்காகத் தன் வாழ்வைப் பலியிட்டுக் கொண்டார்.

* * *

புலியினால் பசுவுக்கு நீதி கிடைக்காது. பூனையால் எலி வாழ முடியாது. பணக்காரனால் ஏழை சுகம் பெற்றுவிட முடியாது—இது அழகிரியின் சித்தாந்தம்.

'பணக்காரன்'—என்ற வார்த்தை அவருக்குப் பழுக்கக் காய்ச்சிய இரும்பு. 'நம்பாதே தம்பி! அது நயவஞ்சகப் பாம்பு—பணம் தரும் உனக்கு; அதை அமுதென்று நம்பாதே! நம்பினால் போச்சு உன் உயிர்—பின் நீ சாய வேண்டியதுதான்!' என்று கூறுவார். "தேவையாக யிருக்கிறதா-வலுவில் வருகிறானா, அழைத்துக் கோள். அவனைப் பயன்படுத்து. ஆனால் அவன் உன்னைப் பயன்படுத்த விட்டுவிடாதே!" என்று போதிப்பார்.

எரிச்சல், அதோடு எச்சரிக்கை இரண்டும் அவருடைய வாழ்வில் இருந்த காரணத்தால்தான் அவர் 'அஞ்சா நெஞ்சனா'க இருந்து நம் இதயங்களில் அமர்ந்தார்.

பணமோகினிக்குச் சிறிது அவர் அசைந்திருந்தால், அவர் சாதாரண அழகிரியாக மறைந்திருக்க மாட்டார்; ஒரு பணக்காரராக இருந்திருக்கலாம்; பண பலத்தின் வசதிகளை அனுபவித்திருக்கலாம்; இன்னும் சில நாட்கள் இந்த உலகிலே உயிரோடு கூட உலவியிருக்கலாம்!

ப...ண...ம்

வா...ழ்...வு

சு...க...ம்

என்ற மூன்று எழுத்துக்களும் அவரை அடிமையாக்கி விடவில்லை. அதற்குப் பதில் க...ட்...சி வெறி அவரைக் கட்டியணைத்துக் கொண்டது—காலமெல்லாம் துணையாக நின்று, அவரைக் கருகிய மலராக்கிவிட்டது.

'ஓட்டைக் குடிசை, ஒன்றரைச் சான் பாய், ஈயம்பித்தளை, தம்பு, தப்பட்டை, தகரக்குவளை'கள் தான் அவரது சகாக்கள். ஏழைகளின் இதயக்குரல் அவருடைய பேச்சு. இல்லாதோரின் ஏழ்மைக் கீதம் அவருடைய சங்கநாதம்!

ஏழையாகவே பிறந்து ஏழையாகவே வாழ்ந்த அந்த இரும்பு நெஞ்சன், ஏழைகள் இயக்கம்—சுயமரியாதை இயக்கம் என்றே எண்ணினார்; சொன்னார்; இருக்க வேண்டுமென்று பாடுபட்டார்!

"பணம் படைத்தோர் நமக்குக் கருவேப்பிலைபோல — நாம் கையெடுத்துக் கும்பிடும் 'கடவுளா'க ஆகவிடக்கூடாது' என்ற இலட்சியம் கொண்ட அவ்வீரர் தன் வாழ்நாளை அவ்விதமே நடத்தினார். கஷ்டங்களை வருவித்துக் கொண்டார். என்றும் கண்ணீர் சிந்தியதில்லை; புன்சிரிப்பால் இவை எனக்குக் கிடைக்கவேண்டிய பரிசுகள் என்றே கூறினார்.

* * *

ஏழ்மையும் கொடுமையும் நிறைந்து கிடக்கும் திராவிடச் சமுதாயத்தின் இழிநிலை குறித்துச் சிந்திக்கத் துவங்கி, சுயமரியாதை இபக்கம் கண்ட சிற்பிகளில் அழகிரியும் ஒருவர்.

சமுதாயத்தில் சதிராடும் அறியாமையையும் மூட நம்பிக்கையையும் எதிர்த்துப் போராடக் கிளம்பிய சிலரில், முக்கியத்துவம் வாய்ந்தவர் அழகிரி.

அவர் விரும்பியிருந்தால் தனது "சேவையை" வியாபாரமாக்கியிருக்கலாம்—இன்ப வாழ்வு, ஏராளமான பணம் இவைகளை அனுபவித்திருக்கலாம். இலட்சிய வீரன் அவர், எனவே இந்த சுயநலப் பாதைகள் அவர் கண்ணில் படவில்லை!

தலைவனாக வேண்டும், அல்லது தலைவருக்குச் சமமாக ஆகவேண்டும் என்று எண்ணியிருந்தால், அவர் ஆகியிருக்க முடியும்-ஆக்கியுமிருப்பார்கள் அவரது சகாக்கள்—ஆனால் அவர் அதை விரும்பவில்லை; விடுதலைத் தூதனாகவே இருக்க விரும்பினார்; வீண் பெருமையும் வேண்டாத புகழும் அவருக்கு வேம்பாக இருந்தன.

சுயமரியாதை இயக்கம் வளர்ந்த கதை விசித்திரமானது; வேதனைகள் நிறைந்தது. பாமர மக்கள், பண முதலைகள், பாராள்வோர்—இத்தனை மலைகளையும் ஊடுருவிச் செல்ல வேண்டியிருந்தது பகுத்தறிவுப் பாதை. சினம் என்ற காற்று சீற, கல்லடியும் சொல்லடியும் கனவேகத்தில் தாக்க, உற்றார் உறவினரின் 'ஊதாரி இவன் உருப்படமாட்டான்' என்ற ஈட்டிமொழிகள் தாக்க, தத்தித் தவழ்ந்து வளர்ந்தது—வளர்க்கப்பட்டது.

சோகம் நிரம்பிய அச்சோதனைப் பாதையில் வாய்ச் சொல் விளக்காக இருந்தது—அஞ்சாமை, துணிவு ஆகியவைகளே இருளைக் கிழிக்கும் வெளிச்சங்களாயிருந்தன.

வீர முழக்கம், கேலிப் பேச்சு, கேட்போரைப் பிணிக்கும் சொல் வீச்சு—பகுத்தறிவுப் பணியின் முக்கிய கேடயங்கள். இவைகளைத் தாங்கி எதிரிக் கோட்டையைத் தூள் தூளாக்கி 'கொட்டு முரசு' என்று சிங்காரச் சிந்து தந்த சிலரில் மறைந்த மாவீரரும் ஒருவர்.

நமக்கு தளபதியாயிருந்தார்; பண பீடங்களுக்கு அஞ்சா நெஞ்சனாயிருந்தார்; எண்ணத்தில் தூய்மையில்லாத 'கந்தல் துணிகளுக்கு' அவர் 'பட்டுக்—கோட்டை'யாக இருந்தார்—அத்தகைய வீரரை சாவு நம்மிடமிருந்து பிரித்துச் சென்று ஆறாண்டு முடிந்துவிட்டது!

மாவீரனின் சிங்க உருவம் நம்மிடமில்லை எனினும் அவர் கட்டி வைத்த கட்சிக் கோட்டை 'பட்டுக்கோட்டை'யாக இருக்கிறது! பட்டின் பளபளப்பு, கோட்டையின் உறுதி மாற்றாரின் மனதை இயக்கத்தின் அருகில் இழுத்துக் கொண்டேயுள்ளன! எந்த ஆசையை அவர் இதயத் துடிப்பு அடங்கும் நேரத்தில் அருகிலிருந்தோரிடம் சொன்னாரோ, அந்த ஆசை, அவர் மறைந்த ஓராண்டுக்குள் நிறைவேறிவிட்டது. துள்ளிடுங் காளைகள் சுயப் பொறுப்புணர்ந்துவிட்டனர்; கட்சிக் கோட்டையின் கருங்கற்களாக ஆகிக் கொண்டிருக்கின்றனர்!

கட்டுப்பாடும், ஒற்றுமையும் இயக்கத்தின் ஜீவநாடி என்ற ஆசை இன்று நனவாகிவிட்டது—திராவிட முன்னேற்றக் கழக உருவில் வளர்ந்து வருகிறது!

அஞ்சா நெஞ்சன் அழகிரி மனித சமுதாயத்திலே ஒரு ஆள். எனினும் பரந்த கடலிலே பாதை தவறி வீழ்ந்து வேதனை பட்டோரைக் கரையேற்றப் பாடுபட்ட ஒரு கப்பல்!

* * *

சமுதாயம் — ஒரு சமுத்திரம்! அதற்குள்தான் எத்தனை கோரங்கள்—அதோ, பல் நீட்டிப் பாய்ந்து வரும் சுறா, அதை வேகமாக இழுத்துவரும் பேரலை, அதன் சுழற்சி தாங்காது சிக்கித் திண்டாடும் படகு, அதைக் கரை நோக்கிச் செலுத்தப் பாடுபடும் பரதவர்!

விசித்திரம் நிரம்பிய காட்சிகள், சமுதாயச் சமுத்திரத்தில் நாம் காண்பவை. இன்பதுன்பம் என்ற அலைகள்; அதைத் தாண்டிக் கரையேறத் தவிக்கும் மனிதன்; மேலே வெண்ணிற ஆடை; இதயத்திலே இருட்டு; ஏழையென்ற சிறுமீன்; அதைத் தின்று தன் வயிறை நிரப்பத் தாவும் பணக்காரத் திமிங்கிலம்!

சமுத்திரத்தில்தான் பலவித நிறமுள்ள மீன் வகைகள் என்பதல்ல; சமுதாயத்திலும் நிற பேதங் கொண்ட மனித ஜாதி! வேதனையும் சோதனையும் நிறைந்த சமுதாயத்தைச் சீர்திருத்தப் பாடுபட்டவர் அவர்—பரந்த சமுதாயச் சமுத்திரத்தில் அவர் ஒரு சிறு படகு எனினும் அவரது சேவை மனித ஜாதியின் வாழ்வில் மறுமலர்ச்சியைத் தருவது—மகிழ்ச்சியைத் தூண்டுவது!

அதோ, கொடியிலே முல்லை கூத்தாடுகிறது முழு இதழ் விரித்து. நேற்று அது அரும்பு; நாளையோ அதன் அழகு இதழ்கள் குவிந்து விடும்; கவனிப்பாரற்று வாடி உலர்ந்து காற்றில் சிதறிவிடும்!

மனித வாழ்வும் மலர்க் குலம் போன்றதுதான். பிறக்கிறான்—வாழ்கிறான்—சாகிறான்! இந்த இடைக்காலத்திற்குள் எத்தனை எத்தனை வம்புகள்—வீம்புகள்—கீழ் ஜாதி மேல்ஜாதிச் சண்டை, வெட்டு, குத்து, கொலை...வாழப் பிறந்த மனித சமுதாயத்தில் பேதமும் பிளவும் படுத்திவைக்கும்


● தொடர்ச்சி 12-ம் பக்கம்




சுயமரியாதை இயக்கப் பிரசார கால ஆரம்ப முதல் பல இன்னல்களுக்கிடையிலும், எதிர்ப்புகளுக்கிடையிலும், அரும்டணியாற்றிய அஞ்சா நெஞ்சன் அழகர்சாமி அவர்களைத் தமிழகம் என்றும் மறக்க முடியாததாகும். பகுத்தறிவுக் கொள்கைகள் நாட்டில் பரவி, மக்கள் அறிவுத் தெளிவு பெற்றால்தான், உழைப்பின் பலனை தாமே அடைய முடியும்- மக்கள் தன்மானத்துடன் வாழ முடியும் — என்பதை நன்கு உணர்ந்த காரணத்தால், தன்னலம் கருதாமல் பொதுநலம் கருதி இறுதிவரை பணியாற்றி மறைந்தார். அவருக்கு மனைவி மக்களிருந்தும் குடும்ப பாதுகாப்பில் அதிகம் நாட்டம் செலுத்தியதில்லை. தமிழகம் முழுதும் நாள்தவறாமல் சுற்றி பிரசாரம் செய்து வருவார். ஆயினும் அவரைப் 'பட்டுக்கோட்டை அழகர்சாமி' என்று மக்கள் கூறுவார்கள். பட்டுக்கோட்டையிலுள்ள இளைஞர்களை — பள்ளி மாணவர்களை பகுத்தறிவாளர்களாக்கி, சுயமரியாதைக் கொள்கைகளைப் பின்பற்றும் உறுதியுள்ள தன்மானமுள்ளவர்களாக்கி, பட்டுக்கோட்டை என்றால் சுயமரியாதைக் கோட்டை என்று மாற்றுக் கட்சிக்காரர்களும், கருத்து வேறுபாடு கொண்டவர்களும் ஒப்புக்கொள்ளும் அளவிற்கும், காலஞ் சென்ற தேசபக்தர் நாடிமுத்து அவர்களின் எதிர்ப்புக்கும் செல்வத்திற்கும் உருட்டல், மிரட்டல்களுக்கும் சிறிதும் அஞ்சாமல் மன உறுதியுடன் நின்று, பகுத்தறிவுக் கொள்கைக்காகச் சிறந்த நற்பணியாற்றிய நல்லதளபதியாக விளங்கினார். அவர் போன்ற சொல்லறிஞர்கள் உழைப்பு வீண்போகவில்லை. உழைப்பின் பயன்-மக்கள் தெளிவு பெற்று அறிவு வளர்ச்சியுடன் செயலாற்ற வேண்டும் என்ற நிலைமை நாடு முழுதும் பரவியிருப்பதைக்கண்டு இன்று நாம் மகிழ்கின்றோம். அருமைத் தோழர் அழகர்சாமி அவர்கள் பெரும் செல்வம் படைத்திருந்தாரில்லை. ஏழ்மை, வறுமை, கடன் தொல்லை, இறுதியில் உடல் நலிவு எல்லாம் ஒருங்கே சேர்ந்து அவரை இடர்படுத்திற்று. ஒருசமயம குடல்நோய் ஏற்பட்டு, முடிவில் நலிவுற்று மருத்துவ மனைக்கு சிகிச்சைக்குச் சென்றார். பொருள் வசதியின்றி மருத்துவ சிகிச்சை பெறுவது எப்படி முடியும்?

மறைந்த மாவீரர் ஊ. பு. அ. சௌந்தர்யபாண்டியன் அவர்கட்குக் கடிதம் எழுதி ஆதரவளிக்கும்படி வேண்டிக் கொண்டார். அவரும் அன்புடன்குடல்நோய் 'ஆப்பரேஷன்' செய்து, குணம் பெற்று நலம் பெறும் வரை நல்லாதரவுடன் பேருதவிகள் செய்து வந்தார். மற்றொரு சமயம், 'சொந்த நிலங்களை கடன்காரர்கள் சப்தி செய்ய வருகிறார்கள்; ரூ. 2000 அவசரமாகத் தேவை' என்று வேண்டினார். உடன் கொடுத்து உதவினார்.

பகுத்தறிவுக் கொள்கைகளை பரப்பும் கொள்கையில் உறுதியும், மனஉறுதியும் கொண்டவர்களிடம் மறைந்த மாவீரர் ஊ. பு. அ. சௌந்திர பாண்டியனார் அவர்கள் நல்ல மதிப்பும் அன்பும் கொண்டு ஆதரவு காட்டி வந்தார்.



மறைந்த தோழர் அழகிரிசாமி அவர்கள் வைதீகக் குடும்பத்தில் பிறந்திருந்தும், ராமதரியாய் பஜனைமடத்தில் பக்தர்களுடன் பக்தியுள்ள தொண்டனாய், பழமையில் மூட நம்பிக்கையில் இருட்டறையில் கிடந்த வரை, தென்னாட்டில் தோன்றிய சுயமரியாதை இயக்கக் கொள்கைகள் அடியோடு மாற்றியதோடு—சமுதாய முன்னேற்றத்திற்குட, பகுத்தறிவுக் கொள்கைகள் நாட்டில் பரவுவதற்கும் நல்லதொரு பணியாளரைக் கொடுத்து உதவியது. பகுத்தறிவு நூல்களைப் படிப்பதிலும், பிறரை படிக்கும்படி செய்து கேட்டுத் தெளிவு பெறுவதிலும், தாம் பெற்ற தெளிவுகளை மக்களிடம் பொதுக் கூட்டங்களில் 2-மணி 3-மணி நேரம் நகைச் சுவையுடன் வீரம் ததும்ப, அறிவு ததும்ப, அழகு தமிழில், எளிய நடையில் இனிமையாகப் பேசியும் மக்களை உணர்ச்சி பெறச் செய்வார்.

அவர் பேசும் கூட்டங்களில் எதிர்ப்புகள் இருந்தாலும், எதிரிகள் கேள்விகள் கேட்டாலும், எதிர்ப்பாளர்கள், கேள்விகள் கேட்டவர்கள் மனம் மாறுதலடையும்படி அஞ்சா நெஞ்சன் பதிலளிப்பார். கட்டாய இந்தியை எதிர்த்துப் படை புறப்பட்ட காலத்திலும், படையில் முன்நின்று பணியாற்றினார். பல மாநாடுகளை நடத்தியும் பல்லாயிரக்கணக்கானபொதுக் கூட்டங்களில் பேசியும் இறுதியில் உடல் நலிவுற்றார். நோய் வாய்ப்பட்டு மருத்துவமனையில் படுக்கையில் கிடந்தார். வழக்கம்போல் வறுமை, ஏழ்மை, இன்னல்கள் எல்லாம் ஒருங்கே சூழ்ந்து கொண்டன. பொதுச் செயலாளர் அண்ணாத்துரை அவர்கள் நேரில் கண்டு பேருதவி செய்து வந்தார். பேரு மகிழ்வுடன் பெற்றுக் கொண்டு நன்றிகூறி ஊர் சென்றார். அவர் நோய் நீங்கி உடல்நலம் பெறவில்லை. உழைப்பின் மிகுதியால் உயிர் நீத்தார்.


மக்கள் கலங்கினர்கள். அவரது குடும்பம் கலக்கமடைந்தது. அவர் குடும்பத்திற்கு ஏற்படுத்திச் சென்ற கடன் தொல்லைகளைப்போக்க கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் பேருதவி செய்தார்கள். கொள்கைப் பற்றும் மானஉணர்ச்சியுமுள்ள பொதுநல ஊழியர்கள், பொது வாழ்க்கையின்பெயரால் பொருளீட்டுவதற்கில்லை என்பதையும், பொதுநலத்தின் பெயரால் பொருளீட்டும் ஒரு சிலர்பொது வாழ்வில் பொது மக்களிடம் நன்கு மதிக்கப்படுவதில்லை என்பதையம், வெறுக்கப்படுவார்கள் என்பதையும், நம் வாழ்க்கை நடைமுறையில் காண்கின்றோம். பொது வாழ்க்கையிலீடுபட்டால் புகழ், பெருமை, பணமுடிப்பு, வரவேற்புக் தலைமைப்பதவி, பொன்னாடை போர்த்துதல், ஆகியவைகள் ஒன்றன்பின் ஒன்றாகக் கிடைத்துவிடும் என்ற பேராசையில் நம் அருமைத் தோழர் மறைந்த அழகர்சாமி அவர்கள் பொதுநலப்பணியில், பகுத்தறிவுக் கொள்கைகள் பரப்பும் நற்பணியில் ஈடுபட்டாரில்லை.

இங்கு பார்ப்பனீயம், மத ஆதிக்க வெறியர்கள், புரோகிதர்கள், புராணிகர்கள், பணக்காரர்கள், காங்கிரஸ் ஆட்சியாளர்கள் ஆகியோர் கொடுத்த பெரும் எதிர்ப்புகளையும, தாம் பின்பற்றிய கொள்கை வளர்க்கும் பெரிய மனிதருடைய பல்வேறு தொல்லைகளையும் தாங்கி கொண்டுதான் நாட்டில் நற்பணியாற்றி மறைந்தார். அவர் பரப்பிய நற்கொள்கைகளை, பகுத்தறிவைப் பரப்பும் நற்பணிகளை, அவர் விட்டுச் சென்ற வேலைகளை, நாம் மகிழ்வுடன் மனஉறுதியுடன் செய்திடுவோம். ★

## 'சுயமரியாதை' கண்ட :: :: இலட்சியப் பரிதி !

"இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் பிரசங்கியென்றால் பெரியார் ஒருவர்தான். காலஞ் சென்ற மா. ரா. குமாரசுவாமி அவர்கள் அடுத்த பிரசங்கியார். அதுபெரும்பாலும், அருட்பாவை அப்படியே 'குடி அரசு'ப் பத்திரிகை ஆதரிப்பதாக எடுத்துக் காட்டுவதாக இருக்கும். இயக்க வளர்ச்சிக்காக இயக்கத் தலைவர் பெரியாரால் பேசப்படும் பேச்சுக்களிலும் எழுதப்படும் எழுத்துக்களிலும் அதிகமாக உபயோகப்படும் வார்த்தை "சுயமரியாதை" என்பதாகும். மூன்று ஆண்டுகள் இயக்கம் எங்கும் பலமாக வேலை செய்தது. ஆனால் இயக்கத்துக்குப் பெயர் இல்லை. புதுப் பெயர் என்று எடுத்துக் கொண்டால், பட்டுக்கோட்டையில்தான்!

முதன் முதல் "சுயமரியாதைச் சங்கம்" என்ற பெயரை அவ்வூர்த் தோழர்கள் உண்டாக்கினர்கள். அதன் பின்னர், திருநெல்வேலியில் தோழர் கே. சுப்பிரமணியம் அவர்கள் சுயமரியாதைக் கூட்டம் (மாநாடு) கூட்டினர். அதன் பின்னர்தான் சுயமரியாதைச் சங்கம் என்றும், சுயமரியாதைக் கட்சி, மாநாடு என்றும் ஓங்கி வளரத் தொடங்கியது.



சமூகச் சீர்கேட்டிலிருந்து அரசியல் உலகிற்கு நம் கண்ணோட்டத்தைத் திருப்பிய தீரன்!

"பிரமனிய தத்துவங்களைக் கண்டிப்பதும், பிரமனியத்தை ஒழிப்பதுமே சுயமரியாதை இயக்கத்தின் வேலை என்று ஏற்பட்ட மூன்று ஆண்டுகள் வரையிலும், மதசம்பந்தமான கண்டனப் பிரசாரங்களுடன் அரசியலைப்பற்றியும் அவ்வப்போதுள்ள அரசியல் நிகழ்ச்சிகளையும் சேர்த்துப் பிரசங்கம் செய்தவர் நமது கட்சியில் முதன் முதல் அழகர்சாமியேயாகும்"

*திருவாளர் எஸ். வி. லிங்கம், "நான் கண்ட அழகர்சாமி"*
*'திராவிடநாடு' — 17—4—49*

“தம்பி! நான் சொல்வதைக் கேள். நாலுபேர் போகிற வழியிலே சென்று ‘நல்ல பிள்ளை’ யென்று பெயர்வாங்கு; நமக்கேன் இந்த வம்பெல்லாம்?”—வாஞ்சையுடன் கூறுவார் தந்தை.


“கண்ணே! ஊரைத் திருத்த நாம் யாரடா? நம்மால் முடியுமா? நம்மைத் திருத்திக் கொண்டாலே போதாதா? உனக்கேன் இந்த உபத்திரவமெல்லாம். எல்லோரையும் போல் முன்னுக்கு வரும் வழியைப் பார். இந்த இடைஞ்சலை யெல்லாம் ஏன் தலைமீது போட்டுக் கொள்கிருய்?”-தழதழத்த குரலிலேகூறுவார்கள் தாயார்.

“அத்தான்! உங்கள் கட்சிக்கு இதுவெல்லாம் பிடிக்குமோ, பிடிக்காதோ” என்பாள், புன்னகையை வீசிவிட்டு, புது மனைவி. மற்ற அத்தனை விஷயங்களிலும்—சுக துக்கங்களிலும்—தானும் கணவனும் ஒன்றுதான், வெவ்வேறல்ல, பிரிக்க முடியாதவர்கள் என்ற நினைவிருக்கும். ஆனால் இந்த விஷயத்தில் மட்டும் ‘உங்கள்’, ‘எங்கள்’ என்ற பிரிவினை கொண்டாடுவாள்.

முப்பது வருடங்களுக்கு முன்னால், சாதிச் சனியன் கூடாது; சகலரும் சமம் சர்வேஸ்வரன் படைப்பிலே; மூட நம்பிக்கை கூடாது; சம்பிரதாயங்கள் தவிடு பொடியாக வேண்டும்; சுயமரியாதை உணர்வு வேண்டும்; பகுத்தறிவு வளர வேண்டும்; புதிய சமுதாயம் உருவாக வேண்டும்; மகேஸ்வரன் பெயர் சொல்லி மக்களை மந்தைகளாக வைத்திருக்கும் மதத்தார்கள் ஆதிக்கமும் மடமையும் ஒழிய வேண்டும்—என்ற சுயமரியாதைக் கருத்துக்களை நேசித்தவர்கள் வீடுகளிலே நடைபெற்ற முதல் காட்சிதான் மேலே தீட்டியிருப்பது. வீட்டிலே இந்த வேதனையான காட்சி. வெளியேயோ, உற்ருர் உறவினர், ஊர் பெரியவர்களின் உறுமல், கோபம், சாபம், ஊராள்வோரின் சட்டம், உள்ளத்தை ஆளும் சம்பிரதாயம்—இத்தனையும் உரம்போல் பாய்ந்தன.

புதிய கொள்கையைச் சொன்னவர்களுக்கு இருந்த மூலதனமெல்லாம் தங்கள் கருத்துக்கள், நியாயமானது, நேர்மையானது, உண்மையானது, ஊருக்குத் தேவையானது, உலகம் என்றேனும் ஓர்நாள் ஒத்துக் கொள்ளும் என்ற தைரியம்தான். வேறு ஒன்றும் படை வரிசையிலேயில்லை. எதிரிப் படையாகிய பிரமணியமோ, கோட்டை கொத்தளங்களுடன், ரதகஜதுரகபதாதிகளுடன், கொடி கட்டி, சிம்மாசனத்திலே வீற்றிருந்தது. அதனை எதிர்ப்பது என்ற எண்ணமோ, எதிர்க்க வேண்டும் என்று நினைக்கிறவர்களுக்கே எழ முடியாத பயங்கரமான சூழ்நிலை!

ஊருக்கு ஊர் கோட்டைக் கொத்தளங்களைப் போல தேவாலயங்கள், திருக்குளங்கள், ஆலயங்களிலே ஏராளமான ஐஸ்வரியம், நிலபுலன்கள், நகை நட்டுகள், வைரம் வைடூரியங்கள்!



ஆண்டவனின் காவலர்கள், அர்ச்சகர்கள், தேர், திருவிழா, கொட்டுமுழக்கு, கும்பாபிஷேகம், மேளச் சத்தம், தாளச் சத்தம், பொன்னர் மேனியனைப் போற்று என்று பகலிலே உபதேசித்துவிட்டு, இரவிலே பளிங்கு மண்டபத்திலே பொன்னவிர் மேனியாளுடன் ‘இகபர’ சுகங்கள் அத்தனையும் சுகித்துக் கிடக்கும் மடத்

தம்பிரான்கள், நாலு
நாதன் கட்டளை என்று
வைக்கப்பட்டிருக்கும்
கள், மனு மாந்தாதாவின்
ரங்கள், அதற்கு அரணு
மங்கள், உபநிஷத்துகள்,
போதையை புது மெரு
கூறிய புராணங்கள், இ
கள், அவைகளை கண்
போல் கட்டிக்காக்க
முயைாக புரோகிதக் கூட்

அவர்கள் கையில் மே
தின் திறவு கோல்.

அதே மோட்சத்தில் கை
வைகுந்தம், கற்பக வி
காமதேனு! ரம்பை,
போன்ற நாட்டிய ரா
நாரதகானம், இந்திரபோக

அதனை அடைவதற்கு
துக் கிடந்த மக்கள் கூட்

அந்த மக்கள் கூட்
மத்தியிலேதான் அறிவொ
வேண்டும்; அஞ்ஞானம்
வேண்டும்; புதுக் கருத்
பெற வேண்டும்; புது
மலர வேண்டும்—சாமான்
காரியமா, சகலராலும்
காரியமா?

‘நமக்கேன்?’ என்றி
சோம்பேறிகள்; எதையும்
கவலைப்படாதவர்கள்.

“நம்மால் முடியுமா?”—
சிலர் கேட்டுக் கொண்
கோழைகள்—தங்கள் தி
யையே தவருக கணக்குப்
டுக் கொண்ட தன்னம்
யில்லாதார்கள்.

“நம்மால் முடியுமா மு
என்பதல்ல; நாம் செய்ய
வது அவசியமா, அவசியம்
என்பதுதான் கேள்வி” என்
கூட்டம் கருதியது. அந்த
டம்தான் சுயமரியாதை இ
வேறு நாடுகளில் வி
பலர் மேற்கொண்டி
இத்தகு காரியங்களை. அ
பட்டி மன்றங்களில், ப
ஏடுகளில் புரட்சிக் கருத்
தெரிவித்தனரேதவிர விப
பாமர மக்களிடத்திலல்ல,
காக தூக்கு மரத்தில்
வர்களும், நாட்டிலிருந்த
யடிக்கப்பட்டு ‘பிரஷ்ட
யப்பட்டோரும், கண்
டாக்கப்பட்டோரும்,
கள் ஒடிக்கப்பட்
சிறைச்சாலையிலே சித்ர
செய்யப்பட்டோரும்,
குண்டத்திலே தள்ளப்
ரும் அனந்தம்! அவர்கள்
வாழ்விலே அங்கெல்லா
சமுதாயம் மலர்ந்தது.
பட்ட பயங்கரமான—
நிறைந்த வேலையில் இ
கூட்டம் இறங்கியது.

படித்
டத்தின்
யிலா?
அல்ல.
கூட்ட
ஓடினும்
ஜாபிட
சும், மின
அபொல்
“மாஜிக்
கள்” ஆ
யும், அ
வின்
ஏற்றம்
தையும்,
விக்க
ளின் க
பழக்க
களையும்,
பாண்

★ தொடர்ச்சி 14-

## அந்தோ, அழகர்சாமி!

[அறிஞர் அண்ணு]

*சுயமரியாதை இயக்கத்தின் சுடர்! தன்மதிப்பியக்கத்தின் தனிப்பெரும் தளபதி! பார்ப்பனியத்தின் பகிரங்கப் பகைவன்! மூடப் பழக்கவழக்கங்களை முறியடிக்கும் முன்னணித் தலைவன்! வைதிகத்தின் வைரி! வர்ணுசிரமத்தின் விரோதி! சீர்திருத்தச் செம்மல்! சொற் செல்வன்! சோர்வற்ற உழைப்பாளி! தன்நலம் மறந்து தன் நாட்டுக்குப் பணியாற்றிய பண்புடையோன்! அறிவுப் பாதையில், அங்கும் இங்கும் கிடந்த பள்ளம் படுகுழிகளை நிரப்பிய பகுத்தறிவாளன்! அறியாமையை அகற்ற அஞ்சா நெஞ்சுடன் அவனி சுற்றிவந்த ஆண்மையாளன்! கல்லடியா? கவலைப்படாதே! சொல்லடியா? சோர்வடையாதே! பகைவரின் படையா? பயப்படாதே! எதிர்க்கட்சியினரா? ஏமாந்துவிடாதே! சனுதனமா? அதில் சாய்ந்துவிடாதே! சாதியா? அதனைச் சாகடி! மதமா? அதனை மங்கவை! மாசுகளைத் துடை! மன்மதையின் மாணிக்கமாக விளங்கு! மரியாதையைப் பெறு! சுயமரியாதைப் பெற்றுச் சுக வாழ்வு வாழ முற்படு! இதுவே உன்னுடைய குறிக்கோளாக இருக்கவேண்டுமென்று, எங்கு சென்ருலும் எக்காளமிட்டு, மூலைமுடுக்கெல்லாம் முரசொலி கிளப்பித், தன்மான இயக்கத்தின் முன்னணித் தலைவனுக விளங்கி, அஞ்சா நெஞ்சுடன் அறிவுப்பணிபுரிந்துவந்த அழகர்சாமியே! நீயா மறைந்தாய்? நின்னை மக்கள் மறந்தபோதிலும் நீ அவர்களை மறவாமல் அரும்பணியாற்றி வந்தனையே! கைமாறு கருதாது கடமையைச் செய்த கர்ம வீரனே, நீயா மறைந்தாய்? என் கடன் பணி செய்து கிடப்பதே என்பதை நடைமுறையில் செய்து காட்டிய செம்மலே, நீயா மறைந்தாய்? எதிர்ப்பையே விருந்தாகக் கொண்டு, எண்ணற்ற மக்களின் அறிவுக் கண்களைத் திறந்த ஏந்தலே, நீயா மறைந்தாய்? பகுத்தறிவுப் பாசறையின் படைத் தலைவனே, நீயா மறைந்தாய்? தாயைப் பிரிந்த சேயைப்போல் தவித்து நின்ற தமிழ் மக்களின் தன்மானத்தைக் காக்கவந்த தளபதியே, நீயா மறைந்தாய்? அந்தோ! அழகர்சாமி, நீயோ மறைந்தாய்! நினைத்தாலே நெஞ்சு திடுக்கிடும் செய்தி! மறக்க முடியாத சம்பவம்!!*

— ‘திராவிடநாடு’ 3-4-49.



★ ஜே. பி. கிருஷ்ணன் என்ற பெயரில் சுயமரியாதைக் கருத்துகளைப் புகுத்தி முதன் முதலாக சிறுகதை எழுதியவர் தோழர் ப. கண்ணன். இப்போது அவர் 'பகுத்தறிவு' பத்திரிகையின் ஆசிரியர்.

# காதல் மணம்


## ப. கண்ணன்

1

"பூச்சந்தியிலே பூவிற்று வயிறு வளர்த்த பூக்காரி; கணவன் என்று சொல்ல எவனுமில்லாமல் கண்டவனுக்கெல்லாம் முந்தானை விரித்த விபசாரி; செங்கம்மாளின் மகனைவிடவா நான் கேவலம்? அப்பன் பெயரில்லாத அந்த முருகனை நம்பியா என்னை வெறுத்து விடுவாள் சிங்காரி?"—சுடச் சுடக் கேட்டான் சுந்தரத்திடம், பொதுவுடமை வாதி பரந்தாமன். அவனது கண்கள் சிவந்துவிட்டன. கோபம் மட்டுமல்லாமல், இறுமாப்பும், ஏகத்தாளமும் துள்ளவிட்டன அந்தச் சொற்களிலே.

சுந்தரத்தின் இதயம் சொரேலென்று பற்றியது. ஆத்திரம் பொங்கிப் பிரவகித்தது. எனினும் அணைகோலி அடக்கினான். சுந்தரத்திற்குப் பரந்தாமனும் நண்பன்; முருகனும் நண்பன். "நகுதற் பொருட்டன்று நட்டல்" என்ற கருத்துடையவன் சுந்தரம். மிகு திக்கண் இடித்துரைக்கப் பின் வாங்கமாட்டான். எனினும் அடங்கினான். காரணம்; விஷயம் அவ்வளவு முக்கியத்வம் வாய்ந்தது.

பரந்தாமன் மிராசுதார் மோகனரங்கத்தின் புதல்வன்; முருகன் பூக்காரி செங்கம்மாளின் மகன்; சுந்தரம் ஒரு நடுத்தர வணிகரின் மகன்; மூவரும் பள்ளித் தோழர்களாகப் பயின்று, வளர்ந்து வாலிபம் எய்தியுள்ளவர்கள். மணம் நாடும் பருவத்தினர். எனினும், தகுதியிலும் தரத்திலும் மாறுபட்டவர்கள்.



பரந்தாமன் பிறந்த கோயம்புத்தூரிலேயே முருகனும் பிறந்தான். ஆனால் அவன் பிறந்தது உயர்ந்த மாளிகை; முருகன் பிறந்தது எளிய மண் குடிசை! அவர்களது வளர்ப்பு முறையும் வாழ்க்கை வசதியும் அவ்வாறு தாம் இருந்தன. அவர்கள் இருவரும் பள்ளியிலே நண்பர்கள் என்றாலும், அவர்களிடையே அடிக்கடி வேற்றுமைப் புயலடித்து நட்பு முறிபடுவதுண்டு. அன்பெனும் சிம்பு வைத்துக் கட்டி மீண்டும் அதனைப் பிணைத்து விடுவான் சுந்தரம்.

ஆனால் இதுவரை வீசியடித்த புயலுக்கும், தற்போதைய புயலுக்கும் பெருத்த வேற்றுமையிருந்தது. அதனையறிந்து வேதனையுற்றான் சுந்தரம். அழகி சிங்காரியின் கடைக்கண் பார்வையிலும் கனிவுப் பேச்சிலும் கனன்றெழுந்த காதற் புயல் எக்கச்சக்கமாகச் சுழன்றடித்து ஏழை முருகனை ஒடித்துவிடக் கூடாதே என்று சுந்தரம் மனம் நடுங்கினான்.

சிங்காரி பகட்டுக்காரி. சிரிக்கும் கட்டழகி. தக்க இளம் பருவம் எவரையும் கவர்ந்திழுக்கும் எழில் நலம் பெற்றவள். எவரிடத்திலும் சாதாரணமாகப் பழகுவாள். சரளமாகப் பேசுவாள். எனினும் தவறான நடத்தையுள்ளவள் என்ற பழிச் சொல் அவளை நெருங்க அஞ்சிற்று. அவள் துராசைக்காரருக்கு சுவாலை விட்டெரியும் செந்தழல்! அழகும் பதமும் உள்ள அரிவாள். அதனாலேயே மணமகனைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை துணிந்து மகளிடமே விட்டிருந்தார் தந்தை செல்வநாயகம்.

சிங்காரி பரந்தாமனிடமும் பழகினாள்; முருகனிடமும் பழகினாள்; சிரித்துச் சிரித்துப் பேசினாள்; சிந்தையினைக் கவர்ந்தாள். இருவருமே அவளை விரும்பினார்கள். காதலித்தார்கள். என்றாலும் பரந்தாமன் காதலித்தது அவளது உடம்பை. முருகன் காதலித்தது உள்ளத்தை. அவரவர் வழியே காதலை வளர்த்தார்கள்—பெருக்கினார்கள்! வளர்ப்பு வேகம் முதிர்ந்து. போட்டியாக பரிணமித்துப் புயலாக எழுந்து நின்றது. இருவரும் மோதிக்கொள்ளுதல் கூடாதே என்று துடிந்தான் சுந்தரம். நட்பு நலம் காண விழைந்தான் நண்பன்.

பரந்தாமனும், முருகனும் தன்னைக் காதலிப்பது சிங்காரிக்குத் தெரியும். அவர்கள் இருவரின் காதல் தன்மைகளும் அவளறிவாள். எனினும் வெளிப்படையாக எதுவும் கூறவில்லை. நெஞ்சழுத்தக்காரி! அவளது எண்ணமறிய முயன்றான் சுந்தரம். பெரு முயற்சிக்குப் பிறகு அவளது கருத்தின் கடைக் கோடு விளங்கிற்று. பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம். புரிந்து கொண்டான் சுந்தரம். காதற் போராட்டத்தின் சமரசத் தூதுவனாகச் சென்றான்

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

## இதோ, நினைவுச் சின்னம்!

இயக்க வரலாற்றில் துல்யமாகப் பிரகாசித்த ஒரு அத்தியாயத்தை 28-8-49 அன்று காச நோய்க் கள்வன் கிழித்தெறிந்துவிட்டான். பட்டுக்கோட்டை தந்த பகுத்தறிவுப் பகலவன் அன்று அஸ்தமனமாகிவிட்டான்!

ஈரோடு மாநாட்டிலே இந்தியை எதிர்த்து சிறைச்சாலை நல்கத் துடித்திடும் ஆயிரமாயிரம் வாலிபர்களுக்கு முன்னால், தான் கலந்துகொள்ளப்போகும் கடைசி மாநாடு இதுவே என்று தழதழத்தக் குரலில் கூடியிருப்போரின் இதயங்களெல்லாம் கனத்துப்போகும் வகையில் அன்று அவர் குறிப்பிட்ட வாசகங்கள் இன்று உண்மையாகிவிட்டன....

அந்தோ! குன்று போன்ற நெஞ்சுடையோன்—பாமர மக்களுக்குக் குமட்டுகின்ற சீர்திருத்தக் கருத்துகளை நாவன்மையெனும் செந்தேனிலே குழைத்துக் கொடுத்த செம்மல், அன்று மறைந்துவிட்டான்! விதவைக் கோலத்திலே அவரது மனைவியார்— மூத்த மகனை இழந்த நிலையிலே நமது இயக்கம்!

ஐயோ, அழகிரி! க்ஷயரோகக் கிருமிகள் உன்னுடைய காற்றுக் குழலை அரித்துவிடவில்லை. கடிகார முள்ளைப்போல நாடு முழுதும் பல்முறை சுற்றி, இரத்தம் வற்றும் அளவுக்கு நீ இடிக்குரல் கொடுத்தாயே—

அந்த ஓயாத உழைப்பினால்தான் உருக்குலைந்து போனாய்.

அறிவியக்கம் தந்த அண்ணலே! நாளை சுதந்திர திராவிடத்தில் உன் புகழ்பாடும் நினைவுச் சின்னம் எழுமுன்னரே இதோ தஞ்சையிலே -உன் நெடுமேனி வெந்து நீரான சோழன் தலைநகரிலே -உன் பெயர் கூறும் கல்லறை எழுப்பிவிட்டோம்.

பொது வாழ்விலே ஈடுபட்டு, திசையறியாது தவிக்கும் தெளிவற்ற நெஞ்சங்களுக்கு உன் கல்லறை ஒரு கலங்கரை விளக்கமாக இருக்கட்டும்! சலியாத உழைப்புக்கு; சரிநிகரில்லா சீர்திருத்தக் கருத்துக்களுக்கு உன் கல்லறை ஒரு இலட்சியக் கல்வெட்டாக அமையட்டும்!



# ஏளனத்தால் எதிர்ப்பை அடக்கிடும் ஏந்தல்!

சுயமரியாதைக்காரன் பேசுகிறான் என்றாலே, அவர்கள் மீது வீசுவதற்காக கருங்கல் ஜல்லிகளையும், அழுகல் முட்டைகளையும் மாற்றுக் கட்சிக்காரர்கள் சேகரித்து வைத்திருக்கும் காலம், அது! அந்த பொல்லாத நேரத்திலேதான், காரிருள் கிழிக்கும் கதிரோனாக அழகிரிசாமி உதயமானார்!

மன்னார்குடியிலே ஒரு பொதுக்கூட்டம். புலிக் குரலோ; புகையும் எரிமலையோ என்று கேட்போர் ஐயுறும்படி நாட்டவரின் நலிவு போக்கும் நம் கொள்கைகளை, அழகிரி மக்களின் முன்னிலையில் எடுத்து வைத்துக் கொண்டிருந்தார். வைதீகபுரியின் வாயிற்காப்பாளரோ சும்மாயிருக்கவில்லை! கொட்டும் மழையென மேடையைநோக்கி கற்கள் விழுந்துகொண்டிருந்தன. அழகிரி உதிர்க்கும் முத்து முத்தான வார்த்தைகளுக்கு குறியிடுவதுபோல 'மலைப்பிஞ்சு'களை வீசிக்கொண்டே இருந்தனர். போலிசார் குறுக்கிட்டு அமைதி உண்டுபண்ணும் காலமல்லவே, அது! கூட்டம் குழப்பத்தில் முடிவுறுமோ என்று நமது தோழர்கள் கவலை வசப்பட்டனர். கல்வீச்சு குறையாதது கண்டு அழகிரி திடீரென தன்பேச்சை நிறுத்தினார். கீழே இறங்கி, மேடைக்கு அருகிலே கிடந்த கற்களைப் பொறுக்கிக் கொண்டு திரும்பவும் மேடையில் ஏறிக்கொண்டார். தான் கொண்டுவந்த கற்களை மேஜை மீது குவித்துவிட்டு அழகிரி இப்படிப் பேச ஆரம்பித்தார்;



"தோழர்களே! நான் மன்னார்குடிக்குப் புதியவன். இந்த ஊரிலே என்ன வழக்கம் நிலவி வருகிறது என்பது எனக்குத் தெரியாது. அதை இப்போதுதான் புரிந்துகொண்டேன். சிறந்த வைஷ்ணவத் தலமாக இந்த ஊர் இருந்தும், வைஷ்ணவனான எனக்கு இவ்வூர்ப் பழக்கம் தெரியாமற் போனது மன்னிக்க முடியாத குற்றம்தான். இனி நான் பேசுகிறேன். நீங்களும் கல் எறிந்துகொண்டே என் பேச்சைக் கவனியுங்கள். நானும் உங்கள்மீது கல் வீசிக்கொண்டே பேசுகிறேன்."

அவ்வளவுதான்; கூடியிருந்த பொதுமக்கள் 'கொல்'லென்று சிரித்தனர். கல் வீசக் காரணமாயிருந்த குள்ள மனப்பான்மையினர் கூட்டத்தைவிட்டு மறைந்த விதமே தெரியவில்லை.

---

**காதல்......**

★ 9-ம் பக்கத் தொடர்ச்சி

பரந்தாமனிடம். இதமாகக் கூறினான்: "உன் நெஞ்சத்தில் சிங்காரி இருக்கிறாள். எனவே அவளை நீ மறந்துவிட்டு வேறு ஒருத்தியை மணப்பது நல்லது" என்று.

குலப்பெருமையும் பணச் செருக்கும் மூர்க்கமாக முறுகி எழுந்தன. "முருகன் விபசாரியின் மகன். அப்பன் பெயரில்லாதவன்!' என்ற சொல்லம்புகள் சீறிக் கிளம்பின. சுந்தரம் சினந்தான். மறுகணம் சிந்தனையில் முழுகினான். தலைகுனிந்தான். பூக்காரி செங்கம்மாளை விபசாரி என்று சொல்லிவிட முடியாது. என்றாலும் கணவனில்லாது வாழ்ந்தவள் என்பது ஊரறிந்த ரகசியம்! பரந்தாமனின் அவதூறை மறுக்கவும் முடியாமல் ஒப்பவும் முடியாமல் திணறினான்; திக்கு முக்கலாடினான்.

தொங்கிய முகத்தோடு உட்கார்ந்திருந்த சுந்தரத்தின் முதுகில் வெற்றிக் களிப்போடு தட்டிக் கொடுத்தான் பரந்தாமன். "உண்மை அவ்வளவு பயங்கரமாயிருக்கிறதே. நீ வருந்திஎன்னசெய்வது?" என்றான் சாதுரியமாக. அது சுந்தரத்தின் மனப்புண்ணுக்கு மருந்தாகவில்லை. காப்பியருந்த வேண்டினான் பரந்தாமன். மறுத்து விட்டான் சுந்தரம். தனது பெருமைகள் குறித்துப் பலப்பல கூறினான்; ஏற்கவில்லை சுந்தரத்தின் செவிகள். இருக்கப் பிடிக்கவில்லை; மெதுவாக எழுந்தான். "பரந்தாமா! நீ இவ்வளவு கேவலமாக நடந்துகொள்வாயென்று எதிர்பார்க்கவில்லை. முற்போக்குப் பொதுவுடைமை பேசிப் பயனென்ன? பயங்கரமான உண்மைகளையும் பகுத்தறிவு பூர்வமாக கணித்து, மனிதப் பண்புக்கு வளம் தருவதாக மாற்றிக் கொள்ள முடியாத நீயா பொதுவுடைமைக்காரன்? 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற பொதுமையை இகழ்ந்து தேவையற்ற ஜாதி வெறியையும், பணச் செருக்கையும் பிரதானப்படுத்திவிட்டாய். இனி இது விஷயமாக உன்னிடம் நான் வருவதில்லை—பேசப் போவதில்லை." என்று படபடப்பாகக் கூறினான் சுந்தரம். பரந்தாமனின் பதிலையும் எதிர்பாராமல் வெளியேறிச் சென்றான்.

புன்னகை புரிந்த வண்ணம் சோபாவில் சாய்ந்தான் பரந்தாமன். எண்ணங்கள் பல எக்களித்தன. சமையற்காரன் கொண்டு வந்த காப்பியை வாங்கிப் பருகினான். சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டு காலின் மேல் காலைப் போட்டான். "காதலில் வெற்றி பெறுவது எப்படி?" என்ற நூலைப் பிரித்து அதனுள் புதைத்தான் கண்ணையும் கருத்தையும்!

கோவையிலே மோகனரங்கம் குறிப்பிடத்தக்க செல்வர். பெருத்த நிலபுலம் படைத்தவர். பங்களா, கார், வேலையாட்கள் சகிதம் ஆடம்பரமாக வாழுபவர். அவரதுஒரேபுதல்வன் பரந்தாமன். எனவே செல்வச் செழிப்புக்கும் சுகபோக வாழ்வுக்கும் குறைச்சலே கிடையாது.

மோகனரங்கத்திற்கு வயது அறுபது இருக்கும். இதுவரை அரசியல் அலைகளிலே, சமுதாயப் பிரச்னைகளிலே சிக்கிச் சுழன்றவரன்று. தன்னுடையவும், குடும்பத்துடையவும் பொருளாதாரப் பெருக்கமே லட்சியமாக வாழ்ந்தவர். ஆகவே பரந்தாமனின் பொது வாழ்வுப் பிரவேசத்தை அவர் விரும்பவில்லை. பரந்தாமன், கால மாறுபாட்டையும், நாகரிகத்தையும் எதிர்க்க வலுவின்றி, பொழுது போக்குக்காகப் பொதுவுடைமை பேசுபவன். அறிஞர்கள் மார்க்ஸ், ஏங்கல்ஸ், தத்துவங்களைப் பாடமாக ஒப்புவிப்பான். பதைபதைக்கப் பேசுவான். அதனைக் கேட்டு மிரண்டு விடுவார், பிரபு மோகனரங்கம்! எரிந்து விழுவார் மகன் மீது. எனக்குப் பிறகு எப்படி ஆவாயோ என்று துடித்துப் போவார்!

பரந்தாமனின் தத்துவச் சவடால்களை தந்தை வெறுத்தாலும், ரசிப்பதற்குச் சில பேர் இருக்கத்தான் செய்தார்கள். புகழ்ந்தார்கள். எனவே நாளுக்கு நாள் அவனது பேச்சுப் பெருகிற்று. அதே போல் மோகனரங்கம் மகன் மீது கொண்ட வெறுப்பும் பெருகி வந்தது.

பரந்தாமனின் ஓராண்டுப் பருவத்தில் அவன் தாய் அஞ்சலையம்மாளின் விருப்பப்படி குழந்தைக்கு ஆண்டுநிறைவுவிழா நடைபெற்றது. பிறகு ஆண்டுதோறும் நடந்துவந்தது,ஆடம்பர விசேஷங்களோடு! தன் ஒரே செல்வனின் பன்னிரெண்டாவது ஆண்டு நிறைவு விழாவை முடித்துவிட்டு இவ்வுலகத்தைவிட்டுப் பிரிந்தாள் அஞ்சலையம்மாள்.

மனைவியின் மட்டற்ற விருப்பத்திற்காகவும், மகனின் களிப்புக்காகவும் ஆண்டுதோறும் விழாவினைச் சிறப்பாக நடத்திவந்தார் மோகனரங்கம்.

அன்று பரந்தாமனின் பதினெட்டாம் ஆண்டு நிறைவுவிழா. வழக்கம்போல் ஆலயத்தில் அர்ச்சனை அபிஷேகம். மேளதாளம், பந்தல் பரிவட்டம், விருந்து வேடிக்கை, யாவும் சிறப்பாக நிகழ்ந்தன. நண்பர்களின் வாழ்த்தும், புரோகிதரின் ஆசியும் குறைவறக் கிடைத்தன. பூரித்துப்போனான் பரந்தாமன்.

விழா ஓய்ந்து எல்லோரும் வீடு திரும்பினர். இறுதியாகப் புறப்பட்டனர் சிங்காரியும், தந்தை செல்வநாயகமும். இரவு தங்கி உணவுக்குப் பிறகு செல்லுமாறு அவர்களை வேண்டினான் பரந்தாமன். செல்வநாயகத்தின் இனிய சுபாவம் மோகனரங்கத்திற்குப் பிடித்திருந்தமையால், அவரும் விரும்பினார் அவர்கள் தங்குவதை. ஒப்பினர் தந்தையும், மகளும்.

இரவு மணி 8. உணவு முடிந்தது. பாத்திரம் பண்டங்களை வேலைக்காரர்கள் ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தனர். சிங்காரக்கூடத்தில் சோபாக்களிலே நால்வரும் அமர்ந்தனர். வெற்றிலைப் பாக்கும் வந்தது. எங்கும் நறுமணம் கமழ்ந்தது. மின்சார விசிறியை முடுக்கிவிட்டு, ரேடியோவைத் திருப்பினான். தமிழ் நாடகமொன்று நடந்துகொண்டிருந்தது. இந்திப் பாட்டுகளை விரும்பி, பம்பாய் நிலையத்திற்குமுள்ளை நகர்த்தினான். "ஏன்? தமிழ் நாடகம் பிடிக்கவில்லையா?" வெடுக்கென்று கேட்டாள் சிங்காரி. "ஓ! மறந்துவிட்டேன். உனக்கு நாடகமென்றால் மிகுந்த பிரியமாயிற்றே" என்று திருச்சியைத் திறந்தான் பரந்தாமன்.

"உங்களுக்கு நாடகம் பிடிக்காதோ?"—சிங்காரி கேட்டாள். "உனக்குப் பிடித்ததெல்லாம் எனக்கும் பிடிக்கும்" என்றான் உற்சாகத்தோடு. சிரித்துக்கொண்டனர் பெரியவர்கள்.

"காதல் மணம்" என்ற சிறு நாடகம் நடந்தது. சுவையாக இருந்ததால் எல்லோருமே கேட்டனர். அழகிற் சிறந்த ஒரு செல்வக் குடிப்பெண். அவளை இரு வாலிபர்கள் காதலித்தனர். ஒருவன் செல்வன்; மற்றவன் ஏழை. அந்தப் பெண்ணின் பிறப்பைப் பற்றிய ஒரு களங்கம் வெளிப்படுகிறது. செல்வன் அவளை வெறுக்கிறான். ஏழை மனைவியாக ஏற்கிறான். இது கதையின் சாரம் இது பற்றிய சர்ச்சையொன்று முளைத்தது. செல்வன் செய்ததே சரியென்றான் பரந்தாமன். அவனது காதல் உண்மையானதல்லவென்று குறைகூறுகிறாள் சிங்காரி. 'காதலித்த பெண்ணை குலம் கோத்திரம் காரணமாகக் கைவிடுவது என்பது மிருகத்தனம்' என்று சினந்து பேசினார் செல்வநாயகம்.

பரந்தாமன் கேட்டான்; 'தன் குடும்பப் பெருமையைக் காப்பாற்றிக்கொள்வது குற்றமா?'

"குடும்பத்தின் போலிப்பெருமைக்காக நம்பிய ஒரு பெண்ணின் வாழ்வை நாசமாக்குவது நியாயமா? மனித தன்மைதானா?" செல்வநாயகம் கேட்டார்.

இந்த வாக்குவாதம் வலுக்க வலுக்க, மோகனரங்கத்தின் வதனம் கருத்தது. நெஞ்சத்து வேதனை நெற்றியிலே சுழிந்தது. எனவே அவர்கள் பேச்சுக்கிடையிலே அமர்த்தலாகக் கூறினார்; "பரந்தாமா! உன் கருத்து, ஒருதலைச்சார்பானது. செல்வநாயகம் சொல்வதுதான் சரி!"

"அப்பா! நீங்களா இப்படிச் சொல்லுகிறீர்கள்?" அவன் கேட்டான்.

"ஆமாம்; நான்தானடா சொல்லுகிறேன். மனிதத்தன்மைக்கு முதன்மையளிப்பவர்கள் இந்த முடிவுக்குத்தான் வருவார்கள்!"

"அப்பா! ஒன்று கேட்கிறேன், சொல்லுங்கள். இப்பொழுது சிங்காரியை நானும் விரும்புகிறேன். முருகனும் விரும்புகிறான். முருகன் அப்பன் பெயரில்லாத வேசிமகன், ஈனப்பிறவி என்பது இவர்களுக்குத் தெரிந்துவிட்டால் பிறகு சிங்காரி என்னைத்தானே மணக்க வேண்டும்?"

"சிங்காரி முருகன்மேல் கொண்ட காதல் மெய்யானால் அவனைத்தான் மணக்க வேண்டும்." அழுத்தமாகக் கூறினார் மோகனரங்கம்! பதறிப்போய்விட்டான் பரந்தாமன். "அப்பா! உங்கள் மகனுக்கா ஓரவஞ்சனை செய்வீர்கள்?" என்று கேட்டான் கடுமையாக. கேள்விக்கணை சுருக்கென்று தாக்கிற்று அவரது நெஞ்சை. 'ஓரவஞ்சனை' என்ற சொல் பயங்கர உருவெடுத்தது.

○ தொடர்ச்சி 15-ம் பக்கம்

# வாழ்க அழகிரியின் புகழ்!

**நடிகமணி- டி.வி. நாராயணசாமி.**

“ஊராரின் நிந்தனைகள் உள்ளத்தைச் சுக்கு நூறாக உடைத் தெறிந்தாலும் சரி; கொண்ட கொள்கையை உள்ளத்திலிருந்து எடுத்தெறிய மாட்டேன்—

“வறுமைச் சூறாவளி என் வாழ்வுப் பூங்காவை, உருத் தெரியாமல் அழித்தொழித்தாலும் சரி, உலகு சீர்திருந்த நான் மேற்கொண்டுள்ள உன்னத மான பணியிலிருந்து ஓடிவிட மாட்டேன்—

“எதிரிகள் என்னை நோக்கி 'இந்தா வைரக் குவியல்! அழகு மாளிகை அமைத்துக்கொள்! அன்புக்குரியாளின் அகங்குளிர இதோ, ஆடை அணிகள் ஏராளம்! உனது இன்பச் சித்திரங்கள்—அன்புக் குழந்தைகளைத் தாலாட்ட தங்கத்திலே தொட்டில்! இன்னும் உனக்கு திகட்டிவிடும் அளவுக்கு தேவைப் பொருட்களை குவிக்கிறேன்! நீ மட்டும் கொள்கையை விட்டு விடு!” என்றால், “கோணங்கியே! கோலாகலமான வாழ்வுக்காக கொள்கையை விடும் உன்மத்தர் பரம்பரையிலே நான் உதிக்கவில்லை. என் உடம்பிலே ஓடுவது தன்மான இரத்தம்! இறுதி மூச்சு எனது உடம்பிலே இருக்கும் வரை இலட்சியப் பாதையிலேயிருந்து நழுவிவிட மாட்டேன்!” என வீர முழக்கம் செய்திடும் உண்மைத் தொண்டரின் தலைவர்தான் அழகிரிசாமி!

அழகிரியைப் போன்ற தன்மான வீரர்கள் அமைத்துத் தந்த களத்திலே தான், நாம் இன்று போராடுகிறோம். வெற்றி நடை நடந்து கொள்கையை வளர்க்கிறோம். 'கொள்கை வளருது கோபுரம் போலே' என்றால, அதிலே அழகிரியின் பணி ஊடுருவிக் கிடப்பதை அறியலாம். அறியாமையை எதிர்த்து, மேடு பள்ளங்கள் நிறைந்த சமுதாயச் சருக்கு நிலத்திலே அஞ்சாது வீரப பயணம் செய்து, சொல்லால்—செயலால் எதிரிகளை முறியடித்து, சுயமரியாதைத் தத்துவம் நாடெல்லாம் ஓங்கி வளர வழி வகுத்தார் வீரர் தலைவன் அழகிரிசாமி!

வைதீக வெறியர் கூடாரத்தைத் தூளாக்கித் தகர்த்து, பகுத்தறிவு மணியாகத் திகழ்ந்தார்—நினைத்த மாத்திரத்திலே ஆவேசத்தை அள்ளி வீசி, மறுகணமே மக்களை சோகத்திலாழ்த்தி, மீண்டும் ஒரு விநாடியே நகைச் சுவையைப் பருகச் செய்து, மக்களை எண்ணிய பாதையில் நடக்கச் செய்யும் மகத்தான சக்தி படைத்தன அவரது சொற்பொழிவுகள்.

வாழ்வின் அந்திய காலத்திலேதான் அந்த மாவீரரைச் சந்தித்துச் சொற்பொழிவுகள் சிலவற்றைக் கேட்கும் வாய்ப்புப் பெற்றேன். அதை வைத்து நான் மதிப்பிட்டபோது, அழகிரியார் உண்மையிலேயே சிங்கம்தான்! அவரது வாலிப நாட்களில், சிறு நரிகளின் கொட்டம் நிச்சயமாக அடக்கப்பட்டுத்தான் போயிருக்கும் என யூகித்துக் கொண்டேன்.

மேடையிலாகட்டும்; அல்லது தனியாக வேனும் அவரோடு சந்திக்கும் வாய்ப்புப் பெற்ற எவரும், அவர் சொல்வதைஏற்றுக் கொள்ளத்தான் நேரிடும். சுயமரியாதைப் படைக்கு எதிர்ப்பு முகாமா— அங்கே அழகிரி செல்வார்; ஆணித்தரமான வாதங்களை அடுக்கு அடுக்காக எடுத்துக் கூறுவார்; மாற்றுக் கருத்து கொண்டோர்



திசை தெரியாது ஓடி ஒளிவர்! பட்டுக்கோட்டை அழகிரிசாமி என்றால், எதிரிகள் வட்டாரத்திலே பெரும் கலக்கம்தான். அந்த அளவுக்கு தோற்றத்திலும் பேச்சிலும் கம்பீரமும் கவர்ச்சியும் நிறைந்து, உறுதியான கொள்கை வீரராய்—தீரராய் விளங்கினார்.

தன் வணக்கத்திற்குரிய தலைவர் தன்னைப் புறககணித்து ஒதுக்கிவிட நினைத்த நேரத்திலும், துயரங்கள் இடைவிடாது தொடர்ந்த சமயத்திலும், 'எந்தலைவர் அவரே! கொள்கையும் அதுவே!' என்றார். வறுமைப் பிணி வாழ்வையே முடிக்கும் பெரும் பிணியாக உருவெடுத்தநேரத்திலும்,எதிரிகள் அணிவகுப்புக்குச் சென்றது கிடையாது. நமது கொள்கையை அழித்துவிடும் தன்மையாளரின் கொடியின் கீழ் நின்றது கிடையாது. எந்தக் காரணத்துக்காகவும், 'எங்கேயிருந்தாலும் இலட்சிய கீதம் பாடிட அவர் தவறியதே இல்லை. பெரியார் இராமசாமி அவர்களை 'தோழன் ராமசாமி' என்றழைக்கும் சிறப்புப் பெற்றிருந்த சீரிய தொண்டர் அவர். அறிஞர் அண்ணாவின் மாண்பினை அறிந்தவர். ஆற்றலை உணர்ந்தவர். கடைசி நாட்களிலே நம்மோடு இருந்து, அண்ணாவின் பாதையிலே நம்மை அழைத்துச் செல்ல விருந்த வீரத் தளபதி, நம்மைத் துன்பச் சூழலிலே தள்ளிவிட்டு மறைந்துவிட்டார்! அவரது திருப்பெயர், இன்று திராவிடர் இல்லந்தோறும் ஒலித்திடும்— நெஞ்சில் நின்று நிலைத்திடும் தன்மை பெற்று, கொள்கை ஒளி வீசி நிற்கும் பெயராகப் போய்விட்டது! 'வாழ்க அவரது புகழ்' என வாழ்த்துகின்றனர் வாலிபப் பட்டாளத்தினர். அந்த உணர்ச்சி மயமானவரை நினைக்குந்தோறும் நமக்கு புத்துலகு காணவிழையும் புதுமைத் தத்துவத்தின்மேலே பற்றுதலும், ஆர்வமும், உறுதியும் மென்மேலும் வளர்ந்து கொண்டே இருக்கும்.

துவக்க முதல் முடிவுவரை, கொள்கையாளராக வாழ்ந்து, மக்கள் மனதிலே இடம்பெற்றுவிட்ட அழகிரியாரின் நினைவு நாளன்று, கொள்கை வழி நடந்து, இலட்சிய புரியை அடைவதற்கான மார்க்கம் தேடுவதும், கொள்கைத் துரோகிகளை மக்களுக்குக் காட்டிக்கொடுத்து மதிப்பிழக்கச் செய்வதுந் தான், நமது கடன் என உறுதி எடுத்துக் கொள்வோம்! எதையும் தாங்கும் இதயத்தைப் பெற்று பகுத்தறிவுப் புலவரின் புகழ்பாடி, தாயகத்திற்குத் தொண்டு செய்ய தளராத நம்பிக்கை வளர வழிவகை காணுவோம்!

வாழ்க அழகிரியின் புகழ்!

✶

## நான் கண்ட......

★2-ம் பக்கத் தொடர்ச்சி

சிரிப்பார், நடராசன். உடனே அழகிரிக்கு கோபம் வந்து விடும். கண்டபடி திட்டி விட்டு எழுந்து சென்று விடுவார்.

நான், 'ஏனப்பா திட்டுகிறாய்? நீ கூட்டங்களில் பேசும்போது எத்தனை ஆயிரம்பேர் சிரிக்கிறார்கள்? நடராசன் சிரிக்கும் போது மட்டும் ஏன் கோபம் வருகிறது?' என்பேன். அவர் 'இவன் வேண்டுமென்றே கிண்டலுக்காகச் சிரிக்கிறான். அதனால்தான்திட்டிவிட்டேன், என்பார்.

சாகும் வரை கஷ்டப் பட்டுக்கொண்டுதான் இருந்தார். அப்படிப்பட்ட அருமைத் தோழனை, அஞ்சா நெஞ்சனை, லட்சிய வீரனை இழந்தோம் என்று எண்ணும்போது நான் பலமுறை கண்ணீர் விட்டதுண்டு.

நான் முதலில் கண்டபோது சிரித்தேன்; கடைசியில் ஆஸ்பத்திரியில் கண்டபோது அழுதேன். அந்த மாவீரனைப் பற்றி எழுதுவதென்றால் ஏடு இடந்தராது; எனவே அந்த அஞ்சா நெஞ்சனைப்போல் கொள்கையில் உறுதி படைத்த வீரர்கள் தேவை என்பதோடு இதை முடிக்கிறேன். ✶

## 'சர்'களை எதிர்த்த சாமான்யன்!

கட்சிக்கு நேற்று வந்த வாலிபன், அனுபவக் கோடுகள் நெற்றியில் அழுந்தப்பெற்ற லெனினைப் பார்த்து 'காம்ரேட் லெனின்' என்றுதான் அழைப்பான்; 'கனம் லெனின்' என்று கூறமாட்டான். சீன மொழியை தன் மழலையால் அலங்கரிக்கும் சின்னஞ்சிறியகுழந்தை, தலைவர் மா-சே-துங்கை 'காம்ரேட் மா-சே-துங்' என்றுதான் கூப்பிடுமே யன்றி, 'பிரம்மஸ்ரீ' என்று சொல்லி கௌரவப் படுத்தாது. அழகிரியும் இந்தப் பண்பாட்டை தென்னகத்திலே நிலைநாட்டியிருக்கிறார்.



பொப்பிலி அரசர் வருகிறாரென்றால், வாய் புதைத்து ஒதுங்கி நிற்கும் நண்பர்கள் ஏராளம். அந்த நேரத்தில், எந்த மாநாடாக இருந்தாலும், மா பெரும் கூட்டமாக இருந்தாலும்கூட அவர் பொப்பிலியை 'தோழர் பொப்பிலி' என்றுதான் அழைப்பார். பெரியார் அவர்களைக்கூட பொதுக்கூட்டங்களில் குறிப்பிடும்போது 'தோழர் பெரியார் ராமசாமி' என்றுதான் சொல்லுவார்.

## இலட்சிய வீரன்......

6-ம் பக்கத் தொடர்ச்சி

பாடு—கொடுமைகள் நிறைந்தது! மடைமையின் விளைவாக எழும்பும் இக்கொடுமைகளைக் களைந்து 'எல்லோரும் ஓர் குலம்' என்ற கொள்கையைக் கண்டு அதன் வழியில் தனது கூட்டத்தாரை இட்டுச் செல்லப் பாடுபட்டவர் அவர்.

* * *

நேற்று, இன்று, நாளை...உலகச் சக்கரம் உருண்டு கொண்டிருக்கிறது. நேற்று மலர்ந்த மலர் இன்றில்லை; முன்பு கண்ட காட்சிகள் இப்போதில்லை! வாள் இருந்த கைகளில் துப்பாக்கி; கால்களுக்குப் பதில் கார்; விரைவாகச் செல்ல விமானம்; கால ஓட்டம் மனித சமுதாயத்தின் மறுமலர்ச்சித் தோட்டத்தைப் புதுப்பித்துக்கொண்டே இருக்கின்றது! புதுப்புது எண்ணங்கள், புத்தம் புதிய காட்சிகள், நாள்தோறும் ஏற்பட்டுக்கொண்டேயிருக்கின்றன. புத்தியுள்ள மனிதன் காலத்தோடு போட்டியிடுகிறான்; வெற்றி விருதுகளைப் பெறுகிறான்; விஞ்ஞானத்தால் காலத்தையும் வெல்கிறான்!

காலம்—வெகு வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது; அதோடு கூடவே மனித சமுதாயம் ஓடவில்லை! பின்தங்கிக் கிடக்கிறது, கவனிப்பாரில்லாததால்; 'கடவுள் செயல், காப்பாற்றுவார் அவர், நம்மால் என்ன ஆகும்' என்ற பழைய பாசி மூடிக்கிடப்பதால்! விதி—கடவுள்—மதம். இவை மனிதன் காட்டுமிராண்டியாகக் கானகங்களிலே திரிந்தபோது ஏற்படாதவை. மனிதன் அறிவு பெற்று வாழ முற்பட்ட இடைக்காலத்திலே எழும்பியவை. கடவுளை—மனிதன்தான் சிருஷ்டித்தான். மக்கள் கூட்டத்தை மருட்டி விரட்டித் தன் ஏவலுக்குக் காத்துக் கிடக்க, வல்லான் ஒருவன் வகுத்த தந்திர மார்க்கங்களே விதி—மதம்—கடவுள்!

மறுமலர்ச்சிக் கருத்தைத் தமிழகத்திலே பரவவிடப் பாடுபட்டார் அழகிரி. விதியென்பது மக்களை மாய்க்கச்செய்யும் ஒரு சதி: மதம் மக்களை சித்திரவதை செய்யுவிக்கும் பலிபீடம்: கடவுள் ஒரு கற்பனை: என்ற உண்மைகளை ஊரெல்லாம் அலைந்து திரிந்து சொன்னார்; உழைத்தார்: தனக்காக அல்ல, மக்களின் நல்வாழ்விற்காக!

பணத் திமிங்கிலங்கள், மதப்பீடம், விதிவிலக்கு, கடவுள் கற்பனை—இத்தனையையும் எதிர்த்துப் போராடினார். போராடும் படையை உண்டாக்க உழைத்தார். வெற்றி கண்டார்.

* * *

கண்ணுக்கெட்டாதபடி பரந்து கிடக்கிறது வானம்: அங்கு இறகு அடித்து ஏதேச்சையாகப் பறந்து திரிகிறது வானம்பாடி—இதுதான் பொதுச்சேவை புகுந்தவர்களின் நிலை.

பரந்த உலகில், வாழப்பிறந்த மனிதக்கூட்டம் வழி தவறியதைக் கண்டு, புறப்படுகின்றனர் சிலர் பொதுநலத் தொண்டர்களாக குடும்பக் கவலை, குழந்தையின் மழலை, வறுமையின் வெம்மை, வாழ்வின் தொல்லை இத்தனையையும் மீறி 'வானம்பாடி'களாக உலவுகிறார்கள்; வாழ்க்கையின் கவலைகளைக் கவனிக்காது பறந்து திரிகிறார்கள்!

சுகவாழ்வைப் பலியிட்டுக் கொண்டு பொது வாழ்வில் குதிக்கும் தொண்டர்களின் வாழ்வு பாலைவனத்தில் சிக்கிய பசு போன்றதாகும்.

இலட்சியத்துக்காகச் செலவழிக்கும் நேரத்தை, தன் இன்ப வாழ்வை எண்ணி பயன்படுத்தி வாழ்ந்து, தன் வாழ்க்கையை முடித்துக்கொண்டு போய்விடலாம்!

ஆறும், மேடும், காடும், கழனியும், உழைக்க இடமும், உழைப்பைப்பெற்று பணம் கொடுக்கும் முதலாளிகளும் நிறைந்து கிடக்கும் உலகில்—இது கஷ்டமானதல்ல!

எனினும் பொதுச்சேவை புரிகிறான்—மக்களைப்பார்த்து, அவர்களின் நிலைமைகளைக் கண்டு மனம் புழுங்கி, இன்னல்களிலிருந்து இவர்களை விடுவிக்க ஏன் நான் ஈடுபடக்கூடாது என்ற கேள்வி வெடிக்க, அவன் தன்னைச் சமுதாயத்தின் தொண்டனாக ஆக்கிக் கொள்கிறான்.

பொதுவாழ்வுக்காகத் தன்னை அடிமைப்படுத்திக் கொண்ட அவனுக்கு மக்கள் மன்றத்தில் செல்வாக்கு ஏற்பட்டால்—மாலை, வாழ்க முழக்கம், மரியாதை எல்லாம் கிடைக்கும்! உழைப்புக்கு ஊராரின் பாராட்டுதல்கள் கிடைக்கும்!

ஆனால், அவனது சுயவாழ்வில் புயல் வீசும். வெளியே வீரமுழக்கம் செய்வான்-வீட்டிலே குமுறல் எழும்பிக்கொண்டிருக்கும்!

பணம் படைத்தோருக்குப் பொதுச்சேவை ஒரு நிலாச்சோறு-ஒரு வகையில் ஓய்வுநேரவேலை! ஆனால் ஏழையின் மத்தியிலிருந்து எழும்பும் புதுத்தொண்டனுக்கு அது ஒரு புயல். சுட்டெரிக்கும் நெருப்பு. சுகம் தராத சோலை!

அழகிரி ஏழையின் மத்தியிலிருந்து எழும்பியவர். ஏழைகளின் இயக்கமான சுயமரியாதை இயக்கத்தில் இருந்தவர். பண வீச்சின் பயமுறுத்தல்களுக்கு அஞ்சாதவராகயிருந்தவர். எனவே அவரது வாழ்வு தாமரையிலைத் தண்ணீராக இருந்தது!

# தொண்டின் தொல்காப்பியன்!

அஞ்சா நெஞ்சன் அழகர் சாமி
தஞ்சா வூரில் சமாதி வடிவில்
அமர்ந்து ஆண்டுகள் ஆறு கழிந்தன!

மண்டிலம் ஆண்ட மராட்டியர், நாய்க்கர்,
எண்டிசை வென்ற ஈடிலாச் சோழர்—
நல்ல ஆட்சியை நடத்தி ஓய்ந்திட்ட
தொல்லையில் லாத கல்லறை பூமியில்
தென்னவர் சிந்தையிற் செங்கோல் ஓச்சிய
மன்னவன் இன்று மறைந்தும் வாழ்கிறான்!
கடல்அலை, ஆடிக் காற்று, எரிமலை—
அடங்கிய நிலைபோல் ஆயினான், விந்தைதான்!
பிறந்த நாட்டைச் சிறந்த நாடாய்ப்
பேணி வளர்க்கவே பேச்சும், மூச்சும்!
அலுப்பு, சலிப்பு, அயர்வு, தளர்வு,
மலைப்பு, தவிப்பு, மறதி. மயக்கம்,
அச்சம், கூச்சம், இச்சகம், ஏளனம்
இறுமாப் பெல்லாம் அறியா மறவன்!
மாண்புடைத் தமிழை மாய்த்திட எண்ணிய
ஆணவ ஆட்சியின் ஆணிவே ரறுத்துக்,
கொடியை உயர்த்திப், படையை நடத்திய
கொள்கைக் கோமான்! குணத்தின் குன்று!!
ஓடவோ, ஒளியவோ, ஒதுங்கவோ, அறியான்!
தேட இயலாமல் திரியவும் மாட்டான்;
நன்றி யுரையை நயந்திட மாட்டான்;
நன்றி கொன்றிடும் நயவஞ் சகரை
வெறுக்கவும் மாட்டான்; விலக்கவும் மாட்டான்!
பொதுவாழ்க் கையிலே புகநினைப் போர்க்கு
இதுதான் அதுவென எடுத்துக் காட்டி,
வாழ்வி லிருந்து சாவு வரையில்
ஆழ்ந்த இலக்கியம் ஆக அமைந்தவன்!

தொண்டிற் கிலக்கணம் கண்ட தூயவன்—
தொல்காப் பியன்எனப் பல்காற் போற்றுவோம்!
வாழிய, அழகிரி! வாழிய, எனவே!

**தருணனந்தம்**

பகுத்தறிவுப் பாசறை உருவான காலமுதல் இன்றுவரை ஒரு கூட்டுக்குடும்பம். அண்ணன், தம்பி அத்தான்—சுயமரியாதைச் சூரர்களின் அழைப்புக்குரல்கள் இவை! யாவரும் ஒரே குடும்பத்தார். தங்கள் கூட்டுக்குடும்பமே கட்சியென்று கவலையும் கருத்தும் கொண்டு கிடந்தனர். ஆகவேதான் சனாதனக் கோட்டையை அந்த 'தம்பு, தப்பட்டை, சயம், பித்தளை'கள் தகர்த்துப் புக முடிந்தது!

சகோதர மனப்பான்மையும், தங்கள் இயக்கத்தவர் எல்லோரும் ஒரே குடும்பத்தவர் என்ற ஒற்றுமை மனப்பான்மையும், சுயமரியாதைத் துவக்க காலத்தில் வளர்ந்ததால், முன்னோடும் தூதுவர்களாக இருந்த பலருடைய வாழ்வு வெம்பிப் போயிற்று; கசங்கிய மலராயிற்று! வெம்பிய அந்த வீரர்களின் சேவை, கூட்டுக்குடும்பம் எனப் பணியாற்றிய அவர்களின் தியாகம், கட்சிக் கோட்டையின்—அந்தத் தியாக மணிகளின் சித்திரங்கள் கோட்டைச் சுவர்களில் தீட்டப்படவில்லை—நினைவுச் சின்னங்கள் ஏற்படவில்லை!

இயக்கத்தை வளர்க்கும் தொண்டர்கள் அவர்கள் என்ற எண்ணம் எழும்பவில்லை. 'ஏதோ, இப்பரந்த உலகில் இடமில்லாது கட்சிக்குள் தனக்காத உழைக்க வந்தவர்கள்' என்ற குறுமதி, எப்படியோ ஏற்பட்டுவிட்ட காரணத்தால் சுயமரியாதை இயக்கத்தின் துவக்க கால வீரர்கள் பலருடைய வாழ்வு—வேதனையில் வீழ்ந்து, அவிந்து போயிற்று!

"இருபது ரூபாய்களுக்காக" ஏச்சும் பேச்சும் பெற்ற ஏழை அழகிரியின் அந்திய காலமும், புயலில் சிக்கிய படகாயிற்று-சிக்கித் தவித்தது! இலட்சியமே பெரிதென வாழ்ந்த அவ்வீரர் மறைந்து ஓராண்டு ஓடிப்போய்விட்டது. இந்த ஓராண்டில், இயக்க வரலாற்றில் ஏற்பட்ட சம்பவங்கள் சாதாரணமானதல்ல—ஒரு புது மறுமலர்ச்சி அத்தியாயமே உருவாகியிருக்கிறது.

அழகிரியின் வாழ்க்கை பொதுச்சேவை புகுந்தவர்களுக்கோர் புத்தகம். இலட்சிய வீரராக இருந்த அவருடைய வாழ்க்கையில் எதிர்பாராது ஏற்பட்ட இடி, மின்னல் எல்லாம் அவரைக் கலக்கவில்லை. இறுதிவரை 'இயக்கமே என் மூச்சு' என்று வாழ்ந்தார்-நமது இளம் இதயங்களெல்லாம் நிறைந்தார்.

சாவு, பிறப்பின் மறுமுனை! உலகில் எத்தனையோ உயிர்கள் பிறக்கின்றன; வாழ்கின்றன; முடிவில் இறக்கின்றன. அழகிரி மறைந்துவிட்டார். அவர் நம்மிடையில்லையென்றாலும், அவரது சிங்க உருவம் அருகே இல்லையென்றாலும், அவருடைய நினைவு நமதியக்கம் உள்ளவரையும் மங்காது: மறையாது!

பொதுச் சேவையில் புகுந்தவன் எந்த வெற்றியைக் காணவேண்டுமோ, அதை அவர் பெற்றுவிட்டார். அவர் எடுத்த காரியங்களை முடிக்கும் படை—நாம் இருக்கிறோம்! அவரது இலட்சியங்களைச் சாதிக்கும் இளம் வீரர்கள் இருக்கிறோம்! அவரது தன்னலமற்ற பொதுப்பாதை, நமது பாதை! களங்கமற்ற கட்சி வாழ்வு, நமது இலட்சியம்!

# சுயமரியாதை வாழ்வே - சுகவாழ்வு!

...மா. தங்கவேலர்...

எங்கெங்கு திரும்பிப் பார்த்தாலும் ஒரே காரிருள். நடைபோட எண்ணி காலைத்தூக்கி வைத்தால் பாதம் படும் இடங்களிலெல்லாம் முற்குவியல். பயங்கரத்தின் எதிரொலியாகக் கோட்டான்கள் அலறின. நடுங்கிய இதயத்தைத் தெளிவால், தீரத்தால் தேற்றிக்கொண்டு நடந்தான். அவன் சின்ன உதடுகள் படபடத்தன. உலகத்தின் புன்னகை அவன் பக்கம் திரும்பவேயில்லை. உள்ளத்திலே வேதனை! உடலிலேயோ காலம் தந்த சவுக்கடியின் வடு! ரத்தமழை பெய்த தன் உடலையே மீண்டும் மீண்டும் பார்த்துக்கொண்டான்......தள்ளாடித் தள்ளாடி நடந்துகொண்டிருந்தான். படபடத்த சின்ன உதடுகள் திறந்து திறந்து மூடின. அந்த உதட்டசைவிலே 'புதுக் குரல்'... ஏன்...புது முழக்கமேதான் ஒலித்துக்கொண்டிருந்தது.

"......தொல்லைதரும் வேதனைப் பயணம் வாழ்க்கையின் தொடர் கதையல்ல. அது இன்றில்லாவிட்டாலும் நாளை இடையே அறுந்துவிடப்போவதுதான். இருள் படர்கிறது. இடர்மிகுந்ததுதான். ஆனால் காலத்தின் சக்கரம் ஒரு இடத்திலேயா நின்றுவிடப்போகிறது? புது ஒளி பிறந்துதான் தீரும். மேகக் கோட்டையின் இரும்பு அரண்களையெல்லாம் உடைத்துக்கொண்டு மோகன முழு நிலவு பவனி வந்தேதான் தீரும். பச்சைக் கொடியிலே இச்சை தராத மொக்கு யிருக்கிறது. அதனடியிலே முள்ளுமிருக்கிறது. நாளை...! குத்தும் முள்ளுக்கு மேலேதான் குதூகலத்தைத் தரும் ரோஜா இதழ் விரித்து சிரிக்கப்போகிறது. இன்று நான் படும் இடர், நாளை நான் அறுவடை செய்யப்போகும் 'மகிழ்ச்சி'க்கு வித்து! இன்றைய துன்பத் தொட்டில்-நாளைய இன்ப... ஊஞ்சல்..." 'புதுக்குரல்' இந்த முறையிலே கிளம்பியது. குரலோசை தந்தவனுக்கோ குதூகலம், வேதனை விரட்டியுங்கூட! வேதனை வலம் வரவைத்த சூதர்களோ, புன்னகைமுகத்தோடு 'எண்ணக்குகை' காட்டிய 'காளை'யைக் கண்டு கதிகலங்கினர். 'அவன்' நடக்கும் பாதையிலே இடர் பெருக்க எண்ணினர். எண்ணத்தை செயலாக்கியும் வைத்தனர். குத்துவாள் பாதையிலே பதிக்கப்பட்டது. தனது பயணத்துக்குத் தூவப்பட்ட குண்டு மல்லிகையாக எண்ணி அந்தச் சிங்கமுகத்தான் பாய்ந்துகொண்டிருந்தான்.

*   *   *

சுயமரியாதைக் கொள்கைகள் ...வீசும் தென்றல்! நமக்கு-நாட்டவருக்குத் தேவைப்படுகிற நல்ல மருந்து! அந்த வளம் நிறைந்த-பலம் வாய்ந்த கொள்கைகளைத்தான் 'பாயும் புலி' என்றனர் பகுத்தறிவுக்கு விளக்கங் கேட்டோர். 'பைத்தியக்காரர்களே! பாயும் புலி அல்ல அது. துள்ளிவரும் புள்ளிமான். ஆடிவரும் அழகு நிலா. பாடிவரும் புதுக்குயில்!'...என்று அழகுப் பேச்சால் தெளிவு தந்தான் சுயமரியாதைக்காரன்.

"ஆத்திகத்தை, முன்னோர் போற்றிய வழிமுறைகளை, மகேசன் 'மனு'வுக்குச் சொல்லி மனு-மக்களுக்குச் சொல்லும் மாண்புமிக்க கொள்கைகளைத் தேவையற்றது...தேளைப்போன்றது என்று வாய் விளக்கம் பேசினால் யாருக்கு லாபம்? புதுக்கொள்கைகள்—புரட்சி கருத்துக்களென்று கதறுவதுதான் கூடாதது. ஆகாத அந்தப் போக்குத்தான் ஆத்திகத்தை ஒழிக்கும் நாத்திகமாகிறது!"—புராண மதிப்பினர் புன்னகை சிந்த இப்படிக் கூறிவிட்டுப் பூரித்திருந்தனர் என்பதோடு... அறிவியக்கத்தை அடித்துப் பேசிவிட்டதாகவும் திருப்தியடைந்து போயினர்.

..."வேதனைச்சுமைகள் அழுத்த, வாழ்வு வளைந்துபோயிருக்கிறது மனிதனுக்கு...இந்த நிலையிலே புராண மூட்டையைவேறு அவன் தலையிலே வைத்து அழுத்தினால் வாழ முடியுமா, அந்த வகையற்றவன்? திக்கற்றுத் திரியும் திராவிட மகனுக்குத் திசைகாட்டுவது புராணப்புழுகா? இல்லவே இல்லை; சுயமரியாதைக் கொள்கைதான் இசைபாடுகிறது—திசை காட்டி! பூசுரர்களுக்குப் பாசுரம் பாடும் புராணக் கொள்கைதானே ஆத்திகம். நாட்டுக்குடையவனுக்கு—நாதியற்றவனுயிருப்பவனுக்கு வாழ்வளிக்க முடியாத திட்டங்களை நம்பித்தானு வாடவேண்டும். யார் யாரோ சுகமாக வாழும்போது, ஆண்ட இனத்தின் பரம்பரை ஆஸ்திக ஆதிக்கத்துக்குப் பணிந்து தானு வாழவேண்டும்! அவன் பிடித்திருந்த தங்கச் செங்கோலும், சிங்காதனமும் இன்று யாரிடமோ? ஆனால் பொன்னாட்டின் பண்பாடிய பரம்பரையும்...திருநாடும் ...கடலாலோ, புயலாலோ கொள்ளையிட்டுப் போகவில்லை! சூதும் சுரண்டலுந்தான் இலட்சிய இனத்தைச்சாய்த்தது பீடத்திலிருந்து. அந்த இனத்துக்குத்தான் புது வாழ்வு தேவை இப்போது. மலரப்போகும் புது வாழ்வின் ஜீவன்தான் சுயமரியாதை. ஆதிக்க ஆர்ப்பரிப்பிலிருந்து தனித்திருக்க அது ஒரு இரும்பு வேலி. சுரண்டல்காரனின் சூது வாளைத் தேக்கும் கேடயம்."

முழக்கமிட்டான் இப்படியெல்லாம் முன்னாள் முடிதாங்கியவன். விழித்துவிட்ட புலியைப் பார்த்தனர் புராண மதிப்பினர். சுந்தர வீட்டைத் தமது சூதுக் கோட்டையாக்கத் துடிதுடித்த துரோகப் பரம்பரை அலறித்தான் துடித்தது. நிலைமை தெரியாதிருந்தவனுக்கு நிலைமை புரிந்துவிட்டது. திக்கற்றிருந்தவனுக்கு பாதை விளங்கிவிட்டது. பாதையிலே அணிவகுத்து வழிகாட்டி அழைத்துச் செல்ல 'நல்லவர்'களும் அணி அணியாக வந்துவிட்டார்கள். ஆத்திக ஆதிக்கம் அலறிப் பார்த்தது. தமது லீலைக்கு எல்லை போடப்படுவதை நன்றாக-மிக நன்றாக உணரத் துவங்கினர். சொல்லாலோ—கல்லாலோ அறிவு இயக்கத்தின் எதிர்ப்பை விரட்டியடிக்க எண்ணினர்! சுடு சொல்லும்—விடு கல்லும் இலட்சிய இதயத்தைக் கலக்கி வைக்கவில்லை. கூர் வாள் காட்டினர் கெடுமதியாளர்...போர்வாள் தூக்கிய பரம்பரையிடம்! வாளும் வேலும் விளையாட்டுக் கருவிகளாயிற்றே: வாள்கண்டா 'வைர'த்தை-மாணிக்கக் கொள்கைகளை விட்டுக்கொடுத்து விடப்போகிறார்கள்!

தாக்குதல் எப்படி எப்படியோ விரிந்தது. விஷப் பிரசாரத்தையும் ஒரு பக்கத்திலே துவக்கிக் கொண்டிருந்தார்கள். நாடகத்திலே, சினிமாவிலே, நாட்டு ஏடுகளிலே ஆத்திக ஆதிக்கத்துக்காக 'போர்' துவக்கினர். நாடெல்லாம், நல்லவர் வீடெல்லாம்பரவிப் படர்ந்துவிட்ட 'அறிவுக் கொள்கை' செத்துவிடவில்லை. அவர்களின் 'புதுமுறை' பிரசாரத்தால் வெற்றிமேல் வெற்றிதான் கிடைத்தது: நாடகத்திலே—நாட்டு ஏடுகளிலே 'நமது குரல்' மாற்றாருக்கு நடுக்கத்தைத் தரும் அளவுக்கு ஒலிக்கத் துவங்கியது. நாடகத்திலே நடமாடி. 'பழம்' கொள்கைகளைக் கட்டிக் காப்பாற்ற ஓடிவந்த பூதேவர்களும், வான் தேவர்களும் வேடத்தை அழித்துவிட்டு 'அபயம்' என்று எங்கோ ஓடுகிறார்கள். 'சந்திரோதயம்' உதயமானது சுயமரியாதை வானிலே! அதே நேரத்திலே ஆத்திகத்துக்கு அஸ்தமனமும் ஏற்படத் துவங்கியது. நாடகத்திலே 'நமது கதை'கள் பவனி வந்தன. 'நாம்' யாரென்று விளக்கி வைக்கப்பட்டது.

'அவர்களும்—அவர்களது கொள்கைகளும் நாட்டுக்குத் தேவையானதுதான்' என்ற மதிப்புரை மக்களிடமிருந்து கிளம்பியது. இந்த 'நல்ல தீர்ப்பு' கிடைப்பதற்காகத்தான் அறிவியக்கத்தினர் ஏசலையும், பூசலையும் தாங்கிக்கொண்டு.....சொல்லமுடியாத தொல்லைகளுக்கெல்லாம் ஆளாகி இலட்சியப் பாதையிலே நடந்து வந்தனர். பயணம் செய்தபோது நம்மிடமிருந்த மாணிக்கங்களிலே சில பலர் இப்போது இல்லை. அவர்கள் எங்கே?......சுயமரியாதைப் பாதை சமைத்தபோது அந்த இலட்சிய மாணிக்கங்களைக் காணிக்கையாகத்தான் தந்துவிட்டோமே! அந்த வீரர்களின் சமாதியிலே நமது லட்சியப் பாதை அமைந்தது. அழகு நாட்டின் விடுதலைக்காக நாம் காணிக்கையாகத் தந்த அழகிரிகள் எத்தனை எத்தனையோ! சாகாத அந்த தியாக சீலர்களின் கல்லறை மூடாத வாயால் அதோபேசுகிறது: பேசிக்கொண்டேயிருக்கிறது. ஆமாம்; அந்தக் குரல் திருநாடு—நம்நாடு ஆகும்வரை ஒலித்துக் கொண்டேதானிருக்கும்!

★



## எண்ணிப் பாருங்கள்!

திசை தவறிய கப்பலிலுள்ள மக்கள், கரைகாண முடியாது தவிக்கும் சமயத்தில் கப்பலின் பாய் மரமும் ஒடிந்துவிழக் கண்டால் எவ்வளவு பதைப்பரோ, அதை விடப் பன்மடங்கு அதிகமான பதைப்பு, தன்மான திசைக்கு வழி காட்டியாக விளங்கிய அழகர்சாமி என்னும் பகுத்தறிவுக் கப்பல், நோய் வாய்ப்பட்டிருந்து-இயற்கை எய்திவிட்டது என்ற நெஞ்சு திடுக்கிடும் செய்தியைக் கேள்விப்பட்டபோது ஏற்பட்டுத் தமிழ் மக்களை எல்லாம் தத்தளிக்கச் செய்துவிட்டது

தளராத உள்ளத்தோடு தமிழ் நாட்டுக்கு ஓயாது பணியாற்றி வந்த ஒரு உண்மையான உழைப்பாளி! அந்த உழைப்பின் பயனாகப் பெற்ற பரிசு உயிரைக் குடிக்கும் நோயாகவா அந்தோ, அமைய வேண்டும்!

கருத்தழிந்து கிடந்த மக்களின் கண்களைத் திறக்க, கத்திக் கத்திக் கருத்துக் குவியலைக் கக்கியவருக்கு காசநோயா பரிசாக கிடைக்க வேண்டும்!

காச நோயைத் தீர்க்கக் காலாகாலத்தில் காசு கிடைக்கவில்லையே என்ற கவலை, மேலும் அவருடைய நோய் வளர்வதற்கு வித்திட்டது போல் ஆகிவிட்டதே என்பதை நினைக்கும் போது ஏன் இந்த நிலை ஏற்பட்டது என்பதை பொதுவாக எல்லோரும், குறிப்பாக சுயமரியாதை இயக்கமும் எண்ணிப்பார்த்து வருந்தாமல் இருக்க முடியாது.

— அறிஞர் அண்ணா

(திராவிடநாடு—3-4-49)

பணமல்ல......

★ 8-ம் பக்கத் தொடர்ச்சி

போகபோக்கியங்களையும், பட்டத்தரசர்களை அவர்கள் ஆட்டுவித்த அட்டகாசத்தையும், அதனை எதிர்த்து புது வாழ்வுக்காகப் போராடிய லிக்லிப்பும், கால்வினும், புருனோவும், கலிலிலோவும், ஸ்விங்லியும், ஸவனரோலாவும், வால்டேரும், ரூசோவும்—பட்ட இன்னல்களையும், அவனிக்குக் கொடுத்த கன்னல் கருத்துக்களையும் கரைத்துக் குடித்திருந்தனர்.

ரோம்நாட்டு பிளிபியன்—பெட்ரீஷயன் தகராறு; கிரேக்க நாட்டு மாஸ்டர்—ஹைலட் சண்டை; பிரஞ்சுநாட்டு பிரபு — குடியானவன் குமுறல்; ஜப்பான் நாட்டு சாமுராய் மமதை; அமெரிக்க நாட்டு நீக்ரோ விடுதலைக் கிளர்ச்சி—அத்தனையும் மனப்பாடம்.

இவைகளெல்லாம், சரித்திரப் பரிட்சையிலே, விடைத்தாளிலே எழுதி, சப்கலெக்டர் வேலைக்கு 'விண்ணப்பம்' போட ஒரு படிக்கட்டு என்று கருதினார்களே தவிர, இங்கு மாரியும், காளியும், மாடனும், காடனும் ஏன்?—

ஜனநாயக நாட்களில் தீண்டாதவன் இருக்கலாமா?—

சண்டாளன் என்று சொல்லும் சாஸ்திரம் இருக்கலாமா?—

குருட்டு நம்பிக்கை இருக்கலாமா? அதனை வளர்க்கும் கொடியவர்கள் இருக்கலாமா?—என்ற கேள்விகளைக் கேட்டு, சாக்கடையிலே இருக்கும் சமுதாயத்தை, புனிதப்படுத்துவோம் என்று எண்ணவில்லை. எண்ணாததுகூட ஆச்சரியமல்ல. அப்படி எண்ணுவது இழிவானது என்றும் கருதினர். 'இந்தக்காலம்' கெட்டுவிட்டதாகவும், "அந்தக்காலம்" மீண்டும் உதயமாக வேண்டும் என்றும், இந்த காலத்தின் சகல வசதிகளையும் அநுபவித்துக் கொண்டே கூறினர். ராமன் காலத்திலே யில்லாத ரயிலிலே பயணம் செய்துகொண்டு, அரிச்சந்திரன் காலத்திலே யில்லாத ஆகாய விமானங்களிலே பறந்துகொண்டு, சீதை காலத்திலில்லாத சினிமாவைப் பார்த்துகொண்டு, வசிஷ்டர் காலத்தில் இல்லாத வானொலியைக் கேட்டுக்கொண்டு, திரௌபதை காலத்திலில்லாத டெலிபோனில் பேசிக்கொண்டு, மேனகை காலத்திலில்லாத மின்சார விளக்கொளியில்அமர்ந்துகொண்டு, 'அந்தக்காலம், அந்தக்காலம்' என்று ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தனர்; இருக்கின்றனர். இந்த படித்தவர்கள் மத்தியிலேயல்ல; பாமரர்களின் மத்தியில் சுயமரியாதை இயக்கம் தனது பணியைத் துவங்கியது. தனது குரலை ஒலித்தது. அந்தக் குரல் கேட்கமுடியாத அளவிற்கு வைதீகத்தின் முழக்கம் செவிடுபடும்படியாக இருந்தது. ஆலயங்களின் மணியோசை, கோவில்களின் கொட்டுமுழக்கு, அர்ச்சகர்களின் மந்திர ஒலி, காலட்சேபக்காரன் புண்ணிய கதை, கணிகையரின் சதங்கை ஒலி, பாடகரின் கானமழை-இத்தனைக்கும் மத்தியில் அந்தக் குரல் கேட்டாகவேண்டும். நடக்கிற காரியமா—எவருமே நடுக்கங்கொள்வர்.

அந்தக் குரலையாவது குளிமையாகக் கருதுவார்களா? சிக்கலான பிரச்சனை. வைதீகத்திற்கோ தேன் கலந்து, பால் கலந்து, ஊன் கலந்து, உயிர் கலந்து பக்திச்சுவை நனி நனி சொட்டச் சொட்ட




......அறிஞர் அண்ணா அவர்களின் தாம்பரம் சந்திப்பு, மருத்துவர்களால் கைவிடப்பட்ட அழகிரிக்கு சிறிது நிம்மதியை அளித்தது......

பாடிய பாசுரங்கள். "திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும்உருகார்." கன்னித்தமிழை கடவுட் காதைக்கு அடிமையாக்கிய கட்டியக்காரன் கம்பனின் வழித்தோன்றல்கள் அனந்தம். ஊர்ஊருக்கு ஸ்தலபுராணங்கள். சங்கீதம் முழுவதும் "அம்பலத்து ஆடிடும் அரசே, சிதம்பர நாதா, திருவருள் தாராய், கனகசபேசன் கைவிடமாட்டான், இத்யாதிகள்!

"நடனமோ-வேலவரே உமைத் தேடி ஒருமடந்தை விடியுமட்டும் —எட்டுக்குடி வேலவன் இசையமுதம் பொழிந்தான்-வள்ளிக்கணவன்பேரை வழிப்போக்கன்சொன்னாலும்—கண்ணன் வருவாரடி" என்றிருந்தது. இந்த நிலையில் சுயமரியாதைக் குரல் கேட்டாக வேண்டும்!

வசதியாவது இருந்ததா? முப்பது வருடங்களுக்குப் பிறகு— இன்றுள்ள நல்ல சூழ்நிலையில் கற்பனை செய்வதுகூட சிரமம். கூட்டத்திற்கு ஆயிரம் ஆயிரம் பேர் திரண்டார்கள் என்ற நிலையல்ல—அலங்காரமான பந்தல்; அழகிய போஸ்டர்கள் என்ற நிலையல்ல— எந்த அச்சாபீஸ்காரனும் நோட்டீசே போட்டுக்கொடுக்க மாட்டான். அவனுக்கு ஆசையிருந்தாலும் ஊர் கட்டுப்பாட்டுக்கு பணிந்தாகவேண்டும். அலங்கார பந்தலிருக்கட்டும்—ஒரு நாற்காலியும், மேஜையும் கொடுப்பதற்கே எவரும் முன்வரமாட்டார்கள்— திரும்பி வராவிட்டாலும் பரவாயில்லை என்பவர்களே கொடுக்க முடியும்.

ஒலிபெருக்கி கிடையாது-உரத்த குரலிலேதான் பேசவேண்டும்.

வரவேற்பு வளைவுகள்-மாவிலைத் தோரணங்கள் உண்டா?—'வேறு' தோரணங்கள் இல்லாவிட்டாலேயே பெரும் வெற்றி, அமோக ஆதரவு என்று அர்த்தம்!

பூமாலையுண்டா—கற்களும் மற்றவையும் பறக்காமலிருந்தாலே மிகவும் திருப்தியான காரியம்!

வந்திருக்கும் மக்களாவது அத்தனைபேரும் ஆதரிப்பவர்களா?—

எத்தனைபேர் மடியிலும் அத்தனை பேர் இதயத்திலும் கட்டாரியை ஒளித்துவைத்திருக்கிறார்கள் என்பது—கொஞ்சம் கலகம் ஆரம்பமானவுடன் தெரியும். இத்தகு நிலையிலும் தங்களது பணியினை துவளாது மருளாது சிலர் செய்தனர். அவர்கள் பணி வீண் போகவில்லை. வெற்றிபெற்றது. அதற்கு அவர்களுக்குக் கிடைத்த இழிவு, பழி, ஏளனம், வசவு, கல்மாரி, சொன்மாரி கொஞ்ச நஞ்சமல்ல. ஆனாலும் அவர்கள் திறமையும் தியாக உள்ளமும் மாற்றாரின் படைக் கலத்திலேயிருந்த ஆயுதங்களைக் கூர் மழுங்கச் செய்தது; பகுத்தறிவுப் படைக்கு வெற்றியைப் பெற்றுத் தந்தது. அந்த அணிவகுப்பில் உயரியதோர் இடத்தைப் பெற்றவர் அஞ்சாநெஞ்சன் அழகரிசாமி.

அழகிரியின் சண்டமாருத பிரசங்கமும், சளைக்காத நகைச்சுவைகளும், சரமாரியான வார்த்தைத் தொடர்களும், சுழல்வேக சூறுவளிப் பிரசாரமும், கருவுற்றிருந்த சுயமரியாதை இயக்கத்திற்கு, உருவும் திருவும் பெறாத நாளிலே எந்த அளவிற்கு உதவியது என்பதை இன்றைய சூழ்நிலையை மற்ற இடங்களில் நினைவுப்படுத்திப் பார்த்துக்கொண்டால்கூட புரிந்துகொள்ள முடியும். அழகிரியின் பணியின் தரத்தையும், அளவையும் குறைவாக மதிப்பிடுவோர், ஒன்று இப்படிப்பட்ட இயங்கங்களின் வரலாறு, வளர்ச்சி ஆகியவைகளைத் தெரிந்து கொள்ளாத கருத்துக் குருடர்களாக இருக்க வேண்டும்; அல்லது பிறரை ஏமாற்ற நினைக்கும் எத்தர்களாக இருக்க வேண்டும்.

தமிழகத்தில் வளர்ந்துள்ள வர்ணாஸ்ரம எதிர்ப்பு, வங்கத்திலே பார்க்க முடியாது. குஜராத் நாட்டிலே கோவில் குருக்களின் கொட்டத்தை இங்குள்ள அளவில் நூற்றுக்கு ஒரு அளவு அறிந்து கொண்டார்கள் என்று சொல்ல முடியாது.

மராட்டிய நாட்டில் மதத்தின் பெயரால் நிலவும் மடமைக் கருத்துக்கள் கல்வி எறியப்பட்டு இங்குள்ள அளவு மறுமலர்ச்சி உதயமாகியுள்ளது என்று சொல்ல முடியாது.

அஸ்ஸாம் நாட்டில் — ஆண்டவன் அவதாரங்கள் பக்தி பூர்வமாக பூஜிக்கப்படும் புண்ணிய கதைகள். இங்கே அறிவுக்கொவ்வாத கேலிப் பொருள்களாக ஆக்கப்பட்டுவிட்டன.

பஞ்சாப் நாட்டில் பாரதமோ, பாஞ்சாலியோ, கைலாயமோ, காகுத்தன் மனைவியோ கடவுட் காதைகளாகக் கருதப்படுகின்றன.

இங்கோ, இவையெல்லாம் கயவரின் புனைசுருட்டாகவும் நகைச்சுவை நாடகங்களாகவும் ஆக்கப் பட்டுவிட்டன.

உத்திர பிரதேசத்திலோ, ஒரிசாவிலோ, உபநிஷத்களுக்கோ, வேதசாஸ்திரங்களுக்கோ கொடுக்கப்படும் உயர்வு அலாதியானது.

இங்கோ அவையெல்லாம் உதவாக்கரை ஏடுகள் என்பது இதயங்களிலே செதுக்கப்பட்டுவிட்டது.

ஆந்திரத்தில்கூட வேமன்னரும் வேறு சிலரும் கூறிய வைதிக எதிர்ப்புக் கருத்துக்கள் 'அரும்பு' நிலையில்தான் உள்ளன.

கேரளத்திலும், குமரன் ஆசானும், குரு நாராயணரும் கூறிய சமத்துவக் கருத்துக்கள் 'தென்றல்' நிலையிலேதான் உள்ளன. இங்குதான்—தமிழகத்தில் தான்—பிரமணியத்தின் விஷப் பற்கள் பிடுங்கப்பட்டு, அதன் வீரியம் குறைக்கப்பட்டு, புதியதோர் சமுதாயம் சண்டமாருத வேகத்தில் உருவாகியுள்ளது. மராட்டியத்திலும், பாஞ்சாலத்திலும், குஜராத்திலும், அஸ்ஸாமிலும், ஆந்திரத்திலும், கேரளத்திலும் தமிழகத்தின் பூரிப்புக்குரிய நிலை உருவாகவில்லையென்றால் அங்கங்கும் ஒரு பத்து அழகிரிசாமிகள் தோன்றவில்லை என்பதைத் தவிர வேறென்ன?

சித்திரச் சோலையைப் பார்க்கிற நேரத்தில் செவ்வந்தியும், சண்பகமும், மகிழம்பூவும், மல்லிகைக் கொத்தும், முல்லையும், இருவாட்சியும், தீம்பலாவும், மாங்கனியும், ரோஜாப்பூப் போன்ற சிவந்த அதரமுடைய சிற்றிடையாள், பாளைச் சிரிப்புக்காட்டி, தனது பாங்கிமார்களுடன் மயிலென நடந்து கிளிமொழி பேசும் காட்சிதான் நினைவுக்கு வருகிறதே தவிர, அந்தச் சோலைகளைத் திருத்துவதற்கு அதன் வேரினிலே எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தனர் என்ற உண்மையை யாரும் நினைப்பதில்லை.

காடு, மலை, கணவாய், வயல், வாய்க்கால் வெளி இவைகளிலே வளைந்து வளைந்து செல்லும் மாமிகு பாதைகளில் பளபளப்பான மோட்டார் காரில் செல்லும் போது, காரின் வேகம் எவ்வளவு-பாண்டியாக்குக்கும், ப்யூக்குக்கும், வான்கார்டுக்கும், வாக்ஸாலுக்கும், செவர்லெட்டுக்கும் ரோல்ஸ்ராயிசுக்கும், போர்டுக்கும் பியட்டுக்குமுள்ள தராதம்யம் என்ன என்பதைத்தான் கவனிக்கிறார்களே தவிர, அந்தப் பாதைகளை வையமெலாம் வகுத்தவர், ஆமையென புலன் ஐந்தும் அடங்கி ஒடிந்து, நடந்து மடிந்திட்டார் என்ற சேதியை எவரும் திரும்பிப் பார்ப்பதில்லை. மரியாதையுடன் கவனிப்பதில்லை. ஆர்த்

★ தொடர்ச்சி 16-ம் பக்கம்

காதல்......

★10-ம் பக்கத் தொடர்ச்சி

தேகமெங்கும் ஒரு நடுக்கம் பரவிற்று. சிந்தனை சுழல தலை கவிழ்ந்தார். "ஆம்! என் மகனுக்கு ஓர வஞ்சனை செய்யக்கூடாதுதான்!" மெதுவாகக் கூறினார் மோகனரங்கம். பிறகு எழுந்தார். "நல்லது; நீங்கள் பேசிக் கொண்டிருங்கள்" என்று சொல்லிவிட்டு நகர்ந்தார்.

பரந்தாமன் எழுந்தான் ஏமாற்றத்தோடு. அசடும் ஆசையும் படர்ந்தன அவன் முகத்தில்! "விவாதம் அரைகுறையாக நின்றுவிட்டதே! முடிவு எனக்குச் சாதகமாக இருக்குமா?"-சிங்காரியைப் பார்த்த வண்ணம் புன்னகையோடு வினவினான். அவனது எண்ணமறிந்த ஏந்திழை சுருக்கமாகக் கூறினாள்: "என் தந்தையும் உங்கள் தந்தையும் மிகுந்த உலக அனுபவமுள்ளவர்கள். முடிவை அவர்களே செய்யட்டும்" என்று. உதட்டைக் கடித்துக் கொண்டான் பரந்தாமன்.

## 3

மனித இனத்திற்கு மட்டுமன்று; எல்லா உயிரினங்களுக்கும் தாய்மை பெருமைக்குரிய ஒரு பண்பு. உயிர்களின் ஊற்றுக்கண், கருணையின் வடிவம், தியாகத்தின் சின்னம். "ஒருமடமாதும், ஒருவனுமாகி இன்புகலந்து" உற்பவிக்கும் கருவினைக் காத்து குழவியாகப் பெற்று வளர்க்கும் மாதா ஒரு மகத்தான பாசப் பெட்டகம்; அன்பின் மாளிகை! தாய்மையின் பண்புகளையும் அவற்றைத் தாங்கும் தாயின் பெருமையையும் நன்கறிந்தவன் முருகன். எனவே தன் தகப்பன் யாரெனத் தெரியவில்லை என்றாலும், அதற்காக அவன் தாயை இகழவில்லை.

செங்கம்மாள் இறந்து மூன்றாண்டுகள் கடந்துவிட்டன.

அன்று அவள் இறந்த நாள். தனது சிறிய இல்லில், தனக்கு முன்னால் கிடந்த மேசைக்கு மேலே சுவரில் மாட்டியிருந்த தாயின் படத்திற்கு முருகன் பணிவன்போடு மலர்மாலை யிட்டான். நாற்காலியில் உட்கார்ந்து, அமைதியாக அன்னையின் படத்தை உற்று நோக்கினான்.

சுந்தரம் வந்தான். தன் நண்பனின் நிலை கண்டு வியப்படைந்தான். முருகனின் எதிரே யிருந்த தாயின் படத்திற்குப் பூ மாலை யணிந்திருப்பது கண்டான்.

"முருகா! ஊரார் உன்னை நாஸ்திகன் என்கிறார்கள். மிகத்தவறு. முன்னறிந்த தெய்வங்களை இதயப் பூர்வமாக வணங்குவதில் உன்னருகே நிற்கவும் அவர்களுக்கு யோக்யதையில்லை" என்றான்.

திடுக்கிட்டான்; நினைவுகுலைந்துத் திரும்பிப் பார்த்தான் முருகன். முறுவல்காட்டி வரவேற்றான்; சுந்தரத்தை ஒடிந்த நாற்காலியொன்றில் அமர்த்தினான்.

முருகன் கூறினான்: "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வங்கள்; ஆனால் அந்த முன்னையதிலும் முதல் தெய்வந்தான் நானறிந்தது!" அவனது கண்கள் கலங்கின.

நெஞ்சத்தின் அடித்தளத்தினின்றும் வெடித்தெழுந்த அந்தச் சொற்களிலே இழைந்த பாசம் சுந்தரத்தைத் திகைக்க வைத்தது. அன்றொருநாள் முருகனை இழித்துரைத்த பரந்தாமனின் சொற்கள் நினைவுக்கு வந்தன.

இத்தகைய பண்பாளனை நிந்தனைக்கு ஆளாவது என்று நினைத்தபொழுது அவன் நெஞ்சு நெகிழ்ந்தது.

"சிங்காரி எப்படியும் என்னை மணப்பது நிச்சயம்." என்றான் முருகன்.

"அதுபற்றித்தான் சிறிதுகவலைப் குடியினன். பணபலம் படைத்தவன். சிங்காரி உளமார உன்னைக் காதலிக்கிறாளென்றாலும் அவள் தந்தை செல்வநாயகத்தின் எண்ணம் பொருளாதார வளத்தின் மேல் படர்ந்துவிட்டால்......?"

"சிங்காரியின் விருப்பத்திற்கு விரோதமாக அவர் நடக்க மாட்டார். சென்ற வாரம் பரந்தாமனின் ஆண்டு நிறைவு விழாவின் போது நடந்த செய்தி தெரியுமா?"

"என்ன? நாமும்தானே போயிருந்தோம்? என்றான் சுந்தரம்."

"நாமெல்லாம் வந்த பிறகு, செல்வநாயகத்தையும், சிங்காரியையும் இரவு தங்கியிருந்து சாப்பிட்டுச் செல்ல வேண்டினராம். இவர்களும் ஒப்பினார்களாம்"

"பின் யென்ன நடந்தது?"

பிறகு சிங்காரியைச் சந்தித்ததாகவும், அன்று இரவு பரந்தாமன் வீட்டில் தங்கியபோது ரேடியோவில் நடைபெற்ற 'காதல் மணம்' நாடகம், அதுபற்றிய விவாதம் யாவும் கூறினான் என்று நடந்த நிகழ்ச்சியைவிளக்கினான் முருகன். ரசித்தான் சுந்தரம்.

அப்பொழுது அவசரமாக ஓடி வந்த சுந்தரத்தின் தம்பி கூறிய செய்தி அவர்கள் இருவரையும் திடுக்கிட வைத்தது.

சென்ற வாரம் தன் அருமந்தப் புதல்வனின் ஆண்டு நிறைவினை ஆடம்பரமாகக் கொண்டாடிய செல்வர் மோகனரங்கம், இந்த வாரம் மாரடைப்பால் மண்ணுலகை விட்டுப் பிரிந்தாரென்றால் யாருக்குத்தான் மலைப்பும் திகைப்பும் ஏற்படாது?

## 4

தந்தையின் ஈமக்கிரியைகளை வைதீக முறைப்படி குறைவின்றி செய்து முடித்தான் பரந்தாமன். அவரது மோட்சப் பயணம் இடுக்கணின்றி நிகழ பசு, பாதக் குறடு. படுக்கை, குடை, யாவும் தாராளமாகப் புரோகிதர்க்கு வழங்கினான்.

காரியங்கள் முடிந்தன. தந்தையின் இறப்புப்பற்றி பரந்தாமன் சிறிது வருந்தினான். எனினும், தனக்கே தனியுடைமையாகி விட்ட நிலபுலம், பங்களா, கார், நகை நட்டு, செக்புத்தகம், கரன்சி கத்தைகள் யாவும் அவனது சிந்தையை மலர வைத்தன.

செல்வநாயகத்தையும், சிங்காரியையும் அடிக்கடி காரையனுப்பி வரவழைத்து விருந்து வைத்தான்.

"பரந்தாமனின் ஆடம்பரத்தில் சிங்காரி சொக்கிப்போய்விடுவாள்; அவள் அவனுக்குத்தான்" என்றனர் ஊரார். சுந்தரமும் மனம் சோர்ந்தான். முருகன் மட்டும் குலையாதிருந்தான்.

அன்று காலை 9-மணியிருக்கும். அவனது குடும்ப வக்கீல் கோபாலகிருஷ்ணனும், நண்பன் சுந்தரமும் வந்தனர். ஆர்வத்தோடு வரவேற்றான்.

"ஒரு முக்கிய விஷயம் பேச வேண்டும்" என்றான் சுந்தரம்.

"முக்கிய விஷயமா? என்ன ஐயா அப்படிப்பட்ட விஷயம்?" சற்று காரமாகவே கேட்டான் பரந்தாமன்.

அதனைப் பொருட்படுத்தவில்லை வழக்கறிஞர். "இறப்பதற்கு நான்கு நாட்களுக்கு முன்பு உங்கள் தந்தை ஒரு உயில் எழுதிப் பதிவு செய்தார். அவரது மரணத்திற்குப் பிறகு, அந்த உயிலின்படி நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு என்னைச் சார்கிறது. அதனைத் தெரிவிக்கவே வந்தேன்." என்றார் வழக்கறிஞர்கோபாலகிருஷ்ணன்.

"உயிலா? என்ன உயில்? எங்கே அது?"—பரந்தாமன் கேட்டான்.

"இதோ, அதன் நகல்" என்று கூறி, தன் பாக்கெட்டிலிருந்து எடுத்துக் கொடுத்தார் இரு காகிதங்களை. அலட்சியமாக அதனை வாங்கிப் படிக்கத் தொடங்கினான் பரந்தாமன்.

அந்த உயிலின் சுருக்கம் இது:

"எனது வாழ்க்கை எவ்வளவு பெருமைக்குரியதோ, அவ்வளவு சிறுமைக்குரியது இதன் அடிப்படை. இளம் பருவத்தில் நானும் செங்கம்மாளும் காதலித்தோம். நானும் ஏழை. அவளும் ஏழை. எனினும் சாதிவெறி, நாங்கள் மணந்து வாழத் தடைச் சுவராய் நின்றது. எனவே இரகசியத்தில் காதல் மணம் புரிந்து கொண்டோம். அனைவராலும் கைவிடப்பட்டு வறுமைச் சேற்றிலே வதையுற்றோம். அஞ்சலை அழகுள்ளவள். பெருஞ் செல்வரின் புதல்வி. அவளை மணந்து வாழ எனக்கு அழைப்பு வந்தது. ரூபா பத்தாயிரம் ரொக்க வரதட்சிணை! நிர்ப்பந்தப்படுத்தப் பட்டேன். நிலை தவறினேன்.

செங்கம்மாளைக் கைவிட்டு, அஞ்சலையை மணந்தேன். திருமணம் முடிந்து நான்காம் மாதத்தில் அஞ்சலை ஒரு குழந்தைக்குத் தாயானாள். நான் தேள்கடி யுண்ட திருடனானேன். அவள் செய்த விபசாரத்தை மறைக்க, அந்த செல்வக் குடியின் மானத்தைக் காக்க, எனது காதல் வாழ்க்கை பலியாக்கப்பட்டுவிட்டது. கருவுற்றிருந்த செங்கம்மாள் இழிவைச் சுமந்து தெருவிலே பூ விற்றுப் பிழைத்தாள். இழி செயல் புரிந்த அஞ்சலை எனது இல்லத்தரசியாக வாழ்ந்தாள். நெஞ்சு நெருப்பாக எரிந்தாலும், பணம் என் வாயைக் கட்டிவிட்டது. பொருள் பெருக்கினேன். நிலபுலன், பங்களா, பணியாட்கள், கார், கண்ணியம் எல்லாம் குவிந்தன: எனினும் மனதில் சாந்தியில்லை. அஞ்சலையின் மகன் பரந்தாமன் மாளிகையிலும், என் மகன் முருகன் குடிசையிலும் வளர்ந்தனர். அவர்கள் நண்பர்களாயினர். இருவரும் ஒரே பெண்ணைக் காதலித்தனர். அவர்களின் காதல் போராட்டம் என் கண்களைத் திறந்து, நல்வழி காட்டிற்று. என்மனசாட்சி என்னை சித்திரவதை செய்தது. எனவே நான் இந்த முடிவுக்கு வந்தேன். இதன் மூலம் நான் செய்த மன்னிக்கமுடியாத தவறுகளுக்கும் ஓரவஞ்சனைகளுக்கும் கழுவாய் தேடிக் கொள்கிறேன். நான் என் மணத்திற்கு விலையாகப் பெற்ற ரூபா பத்தாயிரத்தை அப்பன் பெயரில்லாத பரந்தாமன் அடையட்டும்; மற்ற எனது சொத்துக்கள் யாவற்றையும் என் மகன் முருகன் அடையட்டும். என் மரணத்திற்குப் பிறகு இதனைச் செய்து முடிக்கும் அதிகாரம் எனது நம்பிக்கைக்குரிய வழக்கறிஞருக்குரியது. உலகம் என்னை மன்னிக்குமாக.

இங்ஙனம்.

**மோகனரங்கம்.**

படித்துமுடித்ததும் பிணமாகத் தோன்றினான் பரந்தாமன். அவனது ஐம்புலன்களும் நிலைகுலைந்து மறத்துப்போய்விட்டன. அதிர்ச்சி தாங்கமுடியாமல் அறிவழிந்து, கண்களை மூடியவண்ணம் சாய்ந்தான் சோபாவில்.

பரந்தாமன் எதிர்பார்த்தபடி சிங்காரியும், செல்வநாயகமும் வந்தனர். நிலைமை கண்டு திகைத்தனர். காரணம் கேட்டனர். விளக்கம்கூறமுயன்று,முடியாமல் மலைத்தான் சுந்தரம். சிங்காரியின் முகம் நோக்கினான். புதியதோர் துணிவு கொண்டான்.

"சிங்காரி! மறைப்பதில் பயனில்லை. எப்படியும் தெரிந்துவிடும். என் அப்பனின் மகன் முருகன். அப்பன் பெயரில்லாத ஈனப்பிறவி நான். இதோ தந்தையின் உயில் இதைத் தெளிவுபடுத்திவிட்டது. முருகனையா, என்னையா, நீ யாரை மணந்துகொள்ளப்போகிறாய்?"

சற்றும் எதிர்பாராத இச்செய்தி, சிங்காரியையும், செல்வநாயகத்தையும் வியப்புக் கடலில் முழுகடித்தது.

பரந்தாமனின் கேள்விகளுக்கு பதில்கூறினாள் சிங்காரி! "போலிப் பொதுவுடைமைவாதிக்கும், உண்மைப் 'பகுத்தறிவுவாதிக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை, அடி நாள் முதல் கவனித்து வருபவள் நான். எனவே முருகனை நான் மணப்பதென்பது ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட விஷயம். நாங்கள் "காதல் மணம்" புரிந்து கொள்வதை நீங்கள் மனப்பூர்வமாக வரவேற்கவேண்டும்!"

"வரவேற்கிறேன்; வாழ்த்துகிறேன்." என்றான் பரந்தாமன்.

## ★ சித்தம் உருக்கி! ★

1946-ம் ஆண்டு! நாகை திராவிட நடிகர் கழகத்தினர் 'சாந்தா' நாடகத்தின் மூலம் புதுவையை நம் பிரசாரத்துக்கு ஏற்ற வகையில் பக்குவப்படுத்தியிருந்தனர். அன்று புதுவையிலே திராவிட இயக்க மாநாடு வெகு விமரிசையாக நடந்து கொண்டிருந்தது. திடீரென்று மாநாட்டிலே காலிகள் புகுந்து கலாம் விளைவித்தனர். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களைக் கடுமையாகத் தாக்கிவிட்டு ஓடிவிட்டனர். இந்த நிகழ்ச்சிகளெல்லாம் காலையில் முடிந்துவிட்டன. மாலை நிகழ்ச்சிகளை ஒத்திப்போடலாமா — என்று மாநாடு கூட்டியோர் யோசிக்க ஆரம்பித்தனர்.

அந்த நேரத்திலேதான் அழகிரி வந்துசேர்ந்தார். எப்படியும் மாநாடு தொடர்ந்து நடக்க வேண்டுமென்று வாதிட்டார். அவரது பேச்சே வென்றது!

மாலை நடந்த மாநாட்டில் அழகிரி, தான் 'அஞ்சாத நெஞ்சன்' என்பதை நிலைநாட்டிக் கொண்டார். அந்த சிங்க ஏறு இப்படித்தான் கர்ஜனை புரிந்தது:

"காலையிலே இங்கு வேண்டத்தகாத நிகழ்ச்சிகள் நடந்ததாகக் கேள்விப்பட்டேன். கவிஞர் பாரதிதாசன் எதிரிகளால் தாக்கப்பட்டாராம். கவலையில்லை! கிரேக்க நாடு ஒரு சாக்ரட்டீசை கொன்று போட்டது. இன்றுவரை தேடித்தேடிப் பார்க்கிறது; ஒரு சாக்ரட்டீஸ் கிடைக்கவில்லை, கிரேக்கத்துக்கு! இன்று புதுவைக் குயிலைத் தாக்கிவிட்டீர்கள். நாளை அவருக்கு பொன்னாடை போர்த்தத் தேடுவீர்கள்.

இன்று காலையிலே நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும். இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும்!"

அழகிரி பேசி முடித்தார். காலிகள் கூட அவர் பேச்சு கேட்டு கண்ணீர் சிந்தினர்; சித்தம் கலங்கினர்.

# கடைசிப்பக்கம்

**கே. கே. ரத்னம்; ராயப்பேட்டை**

(?) தி. மு. கழகம் கரைகிறதாமே?

ஆமாம்; சோறுண்பதற்காக காகம் தன் சுற்றத்தை அழைக்க கரைகிறது. அதுபோலத்தான் விடுதலை விருந்து சாப்பிட, சிதைந்து கிடக்கும் திராவிடப் பெருங்குடி மக்களை ஒன்று சேர்ப்பதற்கு தி. மு. கழகம் கரைந்து கொண்டிருக்கிறது!

**துரை. முருகேசன்; காரமடை**

(?) 'அரசியல் வெட்டுக்கிளி' யென்று யாரைக் குறிப்பிடலாம்?

கவர்னர் ஜெனரல் பதவி—முதன் மந்திரி பதவி—போன்று நல்ல பதவிகளை மட்டும் கருத்தில் கொண்டு, தொண்டு புரிவதை ஒதுக்கித் தள்ளும், ஆச்சாரியாரை, அரசியலில் நுனிப்புல் மேய்வதாகச் சொல்லலாம். வெட்டுக்கிளிகள் கூட்டமாகத்தான் வரும்—ஆனால் இந்த 'அரசியல் வெட்டுக்கிளி'யோ, மதுரை அய்யர், கல்கி அய்யர் போன்றோரது பிரிவால், இப்போது துணையிழந்து நிற்கிறது!

**உலகநாதன்; போளூர்.**

(?) "பாடகன் பக்தியோடு பாடினால்தான் மதிப்பு" என்கிறார் ஒருவர்; உங்கள் கருத்தென்ன?

கல்லை கடவுளென மதித்து, மண்டையில் குட்டிக் கொள்வது மூட பக்தி! அதைவிட்டு, அதே மன நிலையை, மக்களின் நலத்திற்காக தொண்டு புரியும் 'தேச பக்தி'யாக ஏன் மாற்றிக்கொள்ளக்கூடாது என்றுதான் நாம் கேட்கிறோம்!

**இரா. மாதவன்;**

**பொத்தியபாளையம்.**

(?) ஒருவன் பிரியப்போகும் திராவிடத்தைப்பற்றி கற்பனை செய்தால், அவன்என்னென்ன காட்சியைக் காண்பான்?

சுதந்தரமாகப் பறக்கும் கொடியைக் காண்பான். காற்று புகும் இடமெல்லாம் சுயமரியாதையின் சாயல் காண்பான்; சுதந்தரம் காண்பான்; சமத்துவம் காண்பான்; சகோதரத்துவம் காண்பான்; மொத்தத்தில் திராவிடமெங்கும் சிரிக்கும் முகங்களைக் காண்பான்; இப்போது அவை யாவும் கற்பனைதானே என்று நினைத்து சஞ்சலப்படுவான்; நாளை நனவாகப் போகும் செய்தி தெரிந்து குதூகலிப்பான்!

**ஆனந்தன்; மாயூரம்.**

(?) ஆச்சாரியார் வருங்காலத்தில் என்ன செய்வார்?

அந்த இருட்டிலே என்ன நடக்குமென்று நமக்கு இப்போது எப்படித் தெரியும்?

**அல்லி; நானுஓயா, சிலோன்.**

(?) ஆந்திராவில் ஜ்வாலையிட்ட செந்தீ என்னவாயிற்று?

அந்த நெருப்பிலேதான் ஆந்திரப் பொது மக்கள் இப்போது நீர் கொட்டிவிட்டார்களே! அந்தக் கரியைத்தான் இப்போது பதவி நாற்காலியிலிருந்து கீழே விழுந்த பிரகாசத்தின் முகத்திலே கோபால ரெட்டி தடவினார்!

**எஸ். வி. மாணிக்கம்;**

**கோழிக்கோடு**

(?) 'நீர்மேல் குமிழி இந்த நானிலத்து வாழ்வு'—என்கிறார்களே; அதுபற்றி நீர் என்ன நினைக்கிறீர்?

சபலபுத்திக்காரர்களும், சஞ்சலத்தால் துவண்டுபோகும் மனப்பான்மையினரும் அடிக்கடி இந்த முடிவுக்குத்தான் வருகின்றனர். ஆழ்ந்து யோசிப்பவன், நிச்சயம் இந்த சோம்பேறிகளின் முடிவை ஒத்துக் கொள்ளமாட்டான்!

**மாதேசன்; தார்க்காடு**

(?) சனாதனம்—அர்த்தம் கூறுங்கள்.

முன்னேறும் சமுதாயத்தை பின்னுக்கு இழுக்கும் சருக்கு நிலம்—சாக்கடைக் கொள்கை—மௌடீகக் குப்பைமேடு—இவ்வாறு, இடத்திற்குத் தக்கபடி பொருள் கொள்ளலாம், அந்த வார்த்தைக்கு!

**தீனன்; செவ்வாய்ப்பேட்டை.**

(?) இப்போது ஆந்திர முதல் மந்திரியாகியிருக்கும் கோபால ரெட்டி அருங்குணசீலரா?

கம்யூனிஸ்டுகளை வாகை சூடிய ஜெயவீரர் என்றுவது சொல்லி வையுங்கள். அவரை குணசீலர் என்றுமட்டும் சொல்லாதீர்கள். அது அவருடைய பழைய சரித்திரத்துக்கு முற்றிலும் புறம்பானதாகும்.

**துரை; தி. நகர்.**

(?) செத்தவர்களைப் பிழைக்க வைக்கும் மூலிகை ஏதாவது இருக்கிறதா?

இருக்கிறது: அதுவும் ஆந்திரக் கம்யூனிஸ்ட்களிடம்தான் தற்சமயம் 'ஸ்டாக்' இருக்கிறது! அவர்களுடைய தவறுகளினால்தானே செத்துப்போன காங்கிரசுக்கு இப்போது உயிர் வந்திருக்கிறது.

**க. கா. இராசு; மணிமுத்தாறு.**

(?) ஈரோட்டுப் பாதையும், காஞ்சிபுரம் பாதையும் எப்போது ஒன்று சேரும்?

இரண்டு பாதையும், 'திராவிட நாடு' என்னும் இலட்சிய புரியிலே நிச்சயம் ஒன்று சேர்ந்துவிடும்!

## பணமல்ல......

★ 14-ம் பக்கத் தொடர்ச்சி

திடும் யந்திரக் கூட்டங்களின் ஆதியந்தம், ஊர்த் தொழிலாளர் உழைப்பில் உதித்தது என்ற மெய்யை எவரும் உணர்வதில்லை.

முழுதும் இல்லாவிட்டாலும்—ஏறக்குறைய வேறான சூழ்நிலையில் உள்ள நாம், மேலே குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்களை நினைவு கூர்வது அழகிரியின் தொண்டின் முக்கியத்வத்தை விளங்கிக் கொள்வதற்கு மிகவும் பயன்படும்.

ஓயாது உழைத்து உழைத்து உருக்குலைந்த அழகிரி—நாட்டின் நோய் போக்க மருந்தளித்த அழகிரி—கடைசி நாட்களில் காச நோயுக்குப் பலியானார். தாம்பரத்திற்கு அருகிலுள்ள சந்தோஷபுரம் மருத்துவ விடுதியில் சேர்க்கப்பட்டார். அழகிரியைப் பொறுத்த வரையில் சந்தோஷபுரம் சஞ்சல புரமாகவே அமைந்தது. அவரது உள்ளத்திலே புகுந்த சஞ்சலத்தை சாவு ஒன்றால்தான் துடைக்க முடிந்தது.

மருத்துவர்களால் நம்பிக்கையில்லை யென்று சொல்லப்பட்டு, பட்டுக்கோட்டை திரும்பினார். திரும்பும் வேளையில் அறிஞர் அண்ணா அவர்களின் தாம்பரம் சந்திப்பு அழகிரியின் அஸ்தமன நாட்களில் சிறிது நிம்மதியை அளித்தது.

அறிஞர் அண்ணா அவர்கள் விருப்பப்படி, அவர்கள் கொடுத்த ரூபாய் 400 எடுத்துக் கொண்டு அழகிரியிடம் சேர்ப்பித்து விடுவதற்காக மறுநாள் இரவு பட்டுக்கோட்டைக்குக் கிளம்பினேன். அதுதான் அழகிரியை நான் கடைசி முறையாகச் சந்தித்தது. பட்டுக்கோட்டைக்கு மறுநாள் காலை போய் சேரும்வரை எனக்கு நிம்மதியில்லை. அண்ணா அவர்களின் விருப்பத்தை நிறைவேற்ற முடியாத நிலையில் அழகிரி விட்டு விடுவாரோ என்ற அச்சம், முந்தின இரவு அண்ணா அவர்களுடன் தாம்பரத்தில் அழகிரியின் தோற்றத்தைக் கண்ட என் உள்ளத்தை அழுத்திக் கொண்டே யிருந்தது.

பட்டுக்கோட்டை சேர்ந்தேன். அழகிரியையும் கண்டேன். ஒரு காலத்தில் கம்பீரமாக உலவி, இடியேறென முழங்கி, நாடே நடுங்கிய அழகிரியை யல்ல. நாடி தளர்ந்து, குரல் கம்மி, சோகம் ததும்ப காலை முதல் மாலைவரை கதிரொளியைப் பரப்பிவிட்டு, மாலைக் கடலில் ஓய்வு கொள்ளப்போகும்போது செக்கர் வானத்தில் சில கதிர்களைச் சிந்தி விட்டுப் போகும் அந்தி நேர சூரியனின் காட்சி அது.

அவரது மனத்தில் இருந்து பெரும் சுமை கீழே எடுத்து வைக்கப்பட்டதாக அவரது முகமும் சொற்களும் கூறின. ஏதேதோ கூறினார். அதுவெல்லாம் தேவையில்லாதது. அவர் கடைசியாக குறிப்பிட்ட ஒன்று மட்டும் குறிப்பிடுகிறேன்.

"மதியழகா! பணமல்ல முக்கியம்: அதில் மறைந்து கிடைக்கிறதே மனம் அதுதான் முக்கியம். முன்னாள் தோழன் ஒருவன் உதவி கிடைக்காமல், உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறான்—அவனுக்கு உதவ வேண்டும் என்று மறந்துவிடாமல் என்னையும் ஒரு பொருட்டாக மதித்து உதவி செய்ய முன்வந்தானே—அண்ணாதுரை—அதற்காக அந்த பேருள்ளத்தை நான் போற்றுகிறேன்—எனது மகிழ்ச்சியைக் கூறு அண்ணாதுரையிடம்!

"உண்மையான நண்பன் யார்—பகைவன் யார் என்பதை நான் உணர்ந்து கொண்டேன் மதியழகா; இதனையும் கூறு"

இவைகள்தான் அவர் என்னிடம் கூறிய கடைசி வார்த்தைகள். பொது வாழ்வில் ஈடுபட்டு கடைசி நாட்களில் எவ்வளவு மனப்புண் அடைந்திருந்தார் என்பதை விளக்கும் சொற்கள் அவை. அழகிரி தனது சொந்தக் குடும்பத்திற்கோ, பெண்டு பிள்ளைகளுக்கோ தனது கடமையைச் செய்யவில்லை. அவர்கள் பயன்பெறவில்லை என்று குற்றம் இருக்கலாம். நாடும், சமுதாயமும் அவரால் பெற்ற நன்மைகள் குறைத்து மதிப்பிட முடியாதது. சமுதாயத்தை, நாட்டை மணந்தவர்களின் கதி—வரலாறு பல வேளைகளில் அப்படித்தான் ஆகிறது. எத்தனையோ அழகிரிசாமிகள் தினமும் பிறக்கிறார்கள், இறக்கிறார்கள். நாடு எல்லோருக்கும் அழுவதில்லை. நெஞ்சிலே வைத்து நேசிப்பதில்லை. யாரோ—ஒரே ஒரு அஞ்சாநெஞ்சனைத்தான் ஏற்றுக் கொள்கிறது. அவர்களது குடும்பத்தாரும் அந்த அளவில் திருப்திகொள்ள வேண்டும். அந்தப் பெருமை பல குடும்பங்களுக்குக் கிடைப்பதில்லை.

திராவிட கலாச்சாரத்தின் கண்ணாடியான சங்க இலக்கியத்தில் கலித்தொகையில் ஒரு பாடல் உண்டு. காதலித்த தலைவனுடன் காதலி வீட்டாருக்குத் தெரியாமல் ஓடிவிடுகிறாள்; அவளைத் தேடி செவிலித் தாய் அலைகிறாள்; எதிரே வருகிற இருவரைக் கண்டு 'என் மகள் ஒருத்தியும் பின் மகன் ஒருவனும் இவ்வழியே போனதைப் பார்த்தீர்களா?' என்று பதைபதைக்கக் கேட்கிறாள். அந்த இருவரின் காதல் வாழ்வு நியாயமானது என்று கருதிய சான்றோர், அந்தத்தாய் அமைதி பெற சில சொற்கள் கூறியதாக அமைந்தது அந்த தமிழ்க்கவிதை.

"கடலிலே முத்துப் பிறக்கிறது: அதை அணிந்து கொள்ளும் அழகரசிக்குத் தவிர கடலுக்கு அதனாலே என்ன பயன்?

மலையிலே சந்தனம் பிறக்கிறது: அதனை மார்பிலே பூசிக்கொள்பவர்களுக்குத் தவிர மலைக்கு என்ன பயன்?

யாழிலே இன்னிசை எழுகிறது அதனை அனுபவிக்கிறவர்களுக்குத் தவிர யாருக்கு என்ன பயன்?

உங்கள் மகளும் உங்களுக்கு அப்படித்தான்" இப்படி அவர்கள் கூறினார்கள். அழகிரியும்

கடல் முத்து;
மலைச் சந்தனம்;
யாழிசை;

அவரை மணந்த சமுதாயத்திற்குப் பயன்பட்டார். அழகிரி போன்றவர் அணையாத தீபமாக காப்பாற்றிக் கொடுத்த ஒளி விளக்கை அறிஞர் அண்ணாவின் தலைமையில் ஆயிரமாயிரம் ஆற்றலர்கள் ஏந்தி நிற்கிறார்கள். அந்த நந்தாவிளக்கின் சுடரால் நம்மிடை இருக்கும் அந்தகாரஇருள் அகலத்தான் போகிறது. நமது சாதனைகள் குறைத்து மதிப்பிடத்தக்கவையில்லை ஆனால் நாம் இன்னும் சாதிக்க வேண்டியது ஏராளம்; மிக மிக ஏராளம். அதற்கு வேண்டிய உணர்வை—எழுச்சியை—ஆற்றலை அஞ்சாநெஞ்சன் அழகிரியின் நினைவு நமக்கு எற்படுத்தட்டும்!

Edited, Printed and published by M. Karunanithi at Murasoli Press, 4/128, Mount Road, Madras-6.